மலர் - 25 இதழ் -04 ஏப்ரல் 2024
Volume -25 Issue - 04 April 2024
தமிழ் மாத இதழ் தனிப்பிரதி ரூ.20/-
Tamil Monthly Per Copy Rs.20/-

# வளரும் விண்ணரசு
VALARUM VINNARASU




## மகிழ்ச்சி நிறைந்த
## உயிர்த்தெழுந்த திருநாள்
## வாழ்த்துகள்!

# பொதுச்சேவகரிடமிருந்து...



கிறிஸ்துவுக்குள் அன்பான வளரும் விண்ணரசு வாசக சகோதர, சகோதரிகளுக்கு, உயிர்த்தெழுந்த நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உயிர்த்தெழுந்த திருநாள் வாழ்த்துகள்.

மார்ச் மாதத் தொடக்கத்தில் விருதுநகர் மாவட்டத்திலுள்ள தம்மநாயக்கன்பட்டியிலுள்ள பழமையான சி.எஸ்.ஐ திருச்சபையில் மூன்று நாட்கள் லெந்து கால சிறப்புக்கூட்டங்களில் தேவசெய்தியை பகிர்ந்து கொள்ளவும், இந்திய திருச்சபை வளர்ச்சி மிஷனின் ஊழியங்களை பகிர்ந்து கொள்ளவும் தேவன் கிருபை செய்தார்.

சென்னையிலுள்ள கிறிஸ்டியன் கம்போர்டிங் மினிஸ்ட்ரீசில் (CCM) நடைபெற்ற ஜெபக்கூட்டத்தில் செய்தியளித்தேன்.

மார்ச் 10ஆம் தேதி சென்னை கிறிஸ்தவ கல்லூரியில் அமைந்துள்ள கல்வாரி சிலுவை ஆலயத்தில் தமிழ் மற்றும் ஆங்கில ஆராதனைகளில் பங்கு கொள்ளவும், தேவசெய்தியளிக்கவும் வாய்ப்பு கிடைத்தது. இந்த வாய்ப்பு அளித்த கல்லூரி முதல்வர் அறிவர் பால் வில்சன் அவர்களுக்கும், சிற்றாலயப் போதகர் அருள்திரு. ராஸ் அவர்களுக்கும் நன்றி. இந்தத் திருச்சபையினருடன் நமது இயக்கத்தின் ஊழியங்களை பகிர்ந்து கொள்ள கிடைத்த வாய்ப்புக்காக தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன்.

இந்திய திருச்சபை வளர்ச்சி மிஷனின் செயற்குழு கூட்டம் மார்ச் 16ஆம் தேதி நடைபெற்றது. அதைத் தொடர்ந்து கல்பாக்கம் சி.எஸ்.ஐ திருச்சபையிலும் தேவனுடைய வார்த்தையையும், குக்கி அருட்பணியாளர்களின் தேவைகளையும் குறித்து பகிர்ந்து கொண்டேன். குக்கி அருட்பணியாளர் திருமதி. சாங்நியு ஜோசப் அவர்கள் குக்கி மொழியில் ஒரு பாடலைப் பாடினார்.





உப்பிலியபுரத்தில் கட்டப்பட்ட ஆலயம் திறந்து வைக்கப்பட்ட போது...



M.Div பட்டம் பெற்ற சுக்ராம் சலாம்



இறையியல் பட்டம் பெற்ற கோண்டி மாணவர்கள்

தொடர்ச்சி கடைசிப் பக்கம் பார்க்க...

நிறுவனர்
டாக்டர். N.J. ஞானையா

ஆசிரியர் குழு:

அருள்திரு.G. பொன்னுராஜ்
அருள்திரு. இம்மானுவேல் பாண்டி
திரு. இரா. பாலசுப்பிரமணியன்
திரு.V.S. தம்பிராஜ்

இதழின் உள்ளே...


| | |
|---|---|
| அருட்செய்தி! | 04 |
| பெருமழையின் இரைச்சல்... | 08 |
| மார்ச் மாத வேத விடைகள்... | 11 |
| தோப்பூர் நினைவுகள்... | 12 |
| துதித்து மன்றாடுவோம்! | 16 |
| சரியான விடை எழுதியவர்கள் | 30 |
| வேத வினாக்கள் | 31 |
| ஆண்டவர் தொடும்போது... | 32 |
| நடப்புச் செய்திகள் | 34 |



| | ஆண்டு சந்தா | ஆயுள் சந்தா |
|---|---|---|
| இந்தியா : | ₹200/- | ₹1500/- |


**சந்திக்கப்படாத மக்கள் கூட்டங்களை சந்தித்து சீடராக்கும் ஊழியத்திற்கு காணிக்கை அனுப்ப வேண்டிய முகவரி**

**ICGM**

**58/1 முத்தாலம்மன் கோயில் தெரு, சேலையூர், சென்னை-73.**

வளரும் விண்ணரசு குறித்த விபரங்களுக்கு
தொடர்பு கொள்ள அலைபேசி : 9003916480

contacticgm@gmail.com

# இந்திய திருச்சபை வளர்ச்சி மிஷன்

**தரிசனம்:** (Vision Statement)

நமது இந்திய நாட்டின் அனைத்து மாநிலங்களில் வாழும் ஒவ்வொரு மக்கள் கூட்டத்திலும் சாட்சியுள்ள சுயசார்புள்ள திருச்சபைகள்.

**வேத ஆதாரம் :** (வெளி. 7 : 9)

"இவைகளுக்குப்பின்பு, நான் பார்த்தபோது, இதோ, சகல ஜாதிகளிலும் கோத்திரங் களிலும் ஜனங்களிலும் பாஷைக்காரரிலு மிருந்து வந்ததும், ஒருவனும் எண்ணக் கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள், வெள்ளை அங்கிகளைத் தரித்து, தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து, சிங்காசனத்திற்கு முன்பாகவும் ஆட்டுக் குட்டியானவருக்கு முன்பாகவும் நிற்கக் கண்டேன்."


**செயல்திட்டம்:** (Mission Statement)

இயேசு கிறிஸ்துவின் சீடர்களாகிய நாம், இந்தியாவில் நற்செய்தி சென்றடையாத, தேவன் வழிநடத்துகிற மக்கள் கூட்டங்களுக்கு, நற்செய்தியைப் பிரசங்கித்து, அவர்களை சீடர்களாக்கி, சாட்சியுள்ள சுயசார்பு திருச்சபைகளை உருவாக்குகின்ற நோக்கத்தோடு செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

**வேத ஆதாரம்:** (மத்தேயு 28 : 19-20)

"ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென்."

வளரும் விண்ணரசு பத்திரிகைக்கு செக், டிராப்ட் ஆன்லைன் மூலம் பணம் அனுப்புபவர்கள் கீழ்க்கண்ட வங்கிக்கணக்குக்கு அனுப்பி 94 42 15 04 82 என்ற எண்ணிற்கு குறுஞ்செய்தி அனுப்பவும்.
A/C NAME: IRAI ARASU TRUST, BANK NAME: STATE BANK OF INDIA
A/C NUMBER: 10143136762, IFSC CODE: SBIN0002235




அருட்செய்தி

## ஆண்டவரே நீர் யார்? என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர்?

Rev.A. **லெஸ்லி நாகராஜன்.**

**நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதுபோல, நீங்களும் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள்.** 1கொரிந்தியர் 11:1.

மேற்கண்ட வசனம் பரிசுத்த பவுல் கொரிந்து பட்டணத்திலே கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்தமாக்கப்பட்டவர்களாயும், பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர்களுமாயிருக்கிற தேவனுடைய சபைக்கு எழுதிய வார்த்தையாகும்.

நான் அறிந்தபடி, உலகத்தில் எந்த ஒரு மனிதனும் பரிசுத்த பவுலைப்போல, "நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறது போல நீங்களும் என்னைப் பின்பற்றுங்கள்" எனக் கூற துணிந்ததில்லை. இவரது சிறப்பு என்ன? அதன் மூலம் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள செய்தி என்னவென்பதையும் நாம் கற்றுக் கொள்வோம்.

பரிசுத்த பவுல், தமது சாட்சியை அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் மூன்றுமுறை பகிர்ந்து கொள்ளுகிறார். (அப்போஸ்தலருடைய நடபடிகள் 9, 22 மற்றும் 26 அதிகாரங்கள்.) இந்த மூன்று பகுதிகளிலும் அவரது இரண்டு கேள்விகளும் ஆண்டவரின் இரண்டு பதில்களையும் நாம் வாசிக்கிறோம்.

**ஆண்டவரே நீர் யார்?**

பவுல் தனது வாழ்க்கையில் பிலிப்பியர் 3: 4–6 வசனங்களில் மிகத்தைரியமாக "நியாயப்பிரமாணத்தின்படி குற்றஞ்சாட்டப்படாதவன்" என தம்மைக் குறித்துக் கூறுகிறார். மேலும் இப்படிப்பட்ட பவுல் ஆண்டவரை நீர் யார்? என்று கேட்கிறார். ஆண்டவரும் "நீ துன்பப்படுத்துகிற நசரேயனாகிய இயேசு நானே" என தெளிவாக்குகிறார்.

லெந்து நாட்களை அறிந்திருக்கிறோம். கிறிஸ்துமஸ் காலங்களை அறிந்திருக்கிறோம். நிறைய புத்தகங்களை வாசிக்கிறோம், அநேக பாடல்களை பாடி ஆராதிக்கிறோம். இயேசு நமக்கு தம்மை வெளிப்படுத்தியிருக்கிறார். ஆனால், உண்மையாகவே இயேசுவை அறிந்திருக்கிறோமா?. பவுலின் முதல் கேள்வியை ஆண்டவரிடம் கேட்டு அறிந்து கொள்ளாமல் வாழும் வாழ்க்கைதான் மாபெரும் பிரச்சனைகளுக்கான வாழ்க்கையாகும்.

நாம் அவரைஅறிந்திருப்போமானால், நமது இரண்டாவது கேள்வியான "நான் என்ன செய்ய வேண்டும்" என கேட்பதே சரியானதாக இருக்கும். மாற்கு 8ஆம்

அதிகாரத்தில் நீங்கள் யார் என்று சொல்லுகிறீர்கள் என இயேசு கேட்டபோது, ஞானமாய் பதில் சொன்ன பேதுருவுக்கு, அதைத் தொடர்ந்து இயேசு கிறிஸ்து தேவதிட்டத்தை விவரித்தபோது, அதை ஏற்றுக் கொள்ள மனதில்லை. இயேசுவை கடிந்து கொள்ளுகிறார்.

இந்தக் கடிந்து கொள்ளுதல் ஒரு அன்பான கரிசனையின் அடையாளமே. ஆனாலும், தேவதிட்டத்திற்கு புறம்பானதால் இயேசு கிறிஸ்து பேதுருவை எனக்குப் பின்னாகப் போ சாத்தானே என்று கூறுகிறார். இயேசுவை சரியாக அறிந்தவர்கள் மாத்திரமே பவுலின் இரண்டாம் கேள்விக்கு ஆயத்தப்படுவர். ஆண்டவரை அறியாத பக்தகோடிகள் நான் என்ன சித்தமாயிருக்கிறீர் என கேட்க துணிவதில்லை. மாறாக, ஆண்டவரே இக்காலத்திலா ராஜ்யத்தை இஸ்ரவேலுக்கு திரும்பக் கொடுப்பீர்? என கேட்கிறார்கள். இப்படிப்பட்ட மனிதர்கள் இவ்வுலகுக்கேற்றவாறு சிந்திக்கிறார்கள்.

இந்நாட்களின் உண்மை நிலவரம் என்னவென்றால், கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்படுவோர், நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர் என கேட்கத் துணிவதில்லை. வாக்குத்தத்த வசனங்களால் தங்கள் வீடுகளையும் (வாகனங்களையும்) நிரப்பிக் கொள்ளும் மக்கள் பரிசுத்த பவுலைப் போல, தைரியமாக நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர் என கேட்பதேயில்லை. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகளில் சொல்லுவோமானால், தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்து போவான் (மாற்கு 8:35). அருமையான சகோதரனே, சகோதரியே நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர் என ஆண்டவரைப் பார்த்து கேட்க மனம் உண்டா? நமது பிள்ளைகள், நமது வேலைகள், வாய்ப்புகள் இவையெல்லாவற்றிலும் ஆண்டவரே, நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர் என கேட்போமா? நான் தேசத்தை அழிக்காதபடிக்கு திறப்பிலே நிற்கவும், சுவரை அடைக்கவுந்தக்கதாக ஒரு மனுஷனைத் தேடினேன், ஒருவனையும் காணேன். ஆகையால் நான்... (எசேக்கியேல் 22: 30–31).

**நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர்?**

நான் வாலிபனாக இருந்த நாட்களில் “தேசம் தீவிரம் அழியுதே, திறப்பில் நிற்போர் இல்லையே. இன்று இயேசு உன்னையே அறைகூவி அழைக்கிறாரே” என்ற பாடலைக் கேட்டு ஊழியத்திற்கும், தேவசித்தத்திற்கும் ஒப்புக் கொடுத்தோம்.

இந்நாட்களில் அர்ப்பணிப்பில்லாத ஆடம்பர ஆராதனைகள் சபைகளை நிரப்பினதால், அலங்கோலமான வாழ்க்கையை, நடைமுறை கிறிஸ்தவ வாழ்க்கை என ஏற்றுக் கொள்ளும் பரிதாபநிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம். எனது நண்பர் ஒருவரிடம் நான் கேட்ட செய்தி அதிர்ச்சியூட்டியது. ஒரு ஆலயத்தில் இசைக்குழுவில் உள்ள ஒருவர், பரிசுத்த ஆவி என் கையிலிருக்கிறார். ஆவியானவர் பிரசன்னத்தை கூட்டவும் குறைக்கவும் என் டிரம்செட்டில்தான் வல்லமையிருக்கிறது என்றாராம்.

ஆலயங்களில் இசை மக்களுடைய உணர்வுகளைத் தூண்டி, பரலோக பிரசன்னத்தை கொடுக்க முடியும் என நினைக்கிறார்கள். நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர் என்று கேட்பவருக்கு இயேசு கிறிஸ்து கூறுவதாவது: “ஒருவன் என்னைப் பின்பற்ற விரும்பினால் அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்.”

இயேசுவைப் பின்பற்றுவது நமது விருப்பம். கேட்டுக்கு செல்லும் விசாலமான பாதையையோ, கடினமான இடுக்கமான, பாதையையோ தேர்ந்தெடுப்பது நமது விருப்பம். நான் ஜீவனையும், மரணத்தையும், ஆசீர்வாதத்தையும், சாபத்தையும் உனக்கு முன் வைத்தேன் என்று உங்கள் மேல் வானத்தையும் பூமியையும் இன்று சாட்சி வைக்கிறேன்; ஆகையால் நீயும் உன் சந்ததியும் பிழைக்கும்படிக்கு, நீ ஜீவனைத் தெரிந்து கொண்டு அவரைப் பற்றிக் கொள்வாயாக. (உபாகமம் 30:19–20). நமது விருப்பத்தின்படி நாம் வாழுகிறோமா? அல்லது அவருடைய விருப்பத்தின்படி வாழுகிறோமா?. இதில் விருப்பத் தேர்வு நமது முடிவாகும். ஜீவனா, மரணமா என்பது நமது விருப்பத் தேர்வுகளே.

தன்னைத்தான் வெறுத்து என கூறும்போது, நமது ஆசைகள், இச்சைகள், இலக்குகள் இவைகளை விட்டுவிட்டு சிலுவையாகிய தேவதிட்டத்தை/சித்தத்தை தேர்ந்தெடுத்து இயேசுவைப் பின்பற்றுவதே புத்திசாலித்தனம். ஆனால் சிலுவையைப் பற்றிய உபதேசம் அநேகருக்கு பைத்தியமாக இருக்கிறது. இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவபெலனாயிருக்கிறது. (1 கொரிந்தியர் 1:18).

இயேசு யார் என்று அறிந்து அவர் சித்தம் செய்ய ஒப்புக் கொடுப்பவருக்கு தங்கள் வாழ்வில் அவர்கள் செய்ய வேண்டிய அவர்கள் பணிகளின் பட்டியலை ஆண்டவர் வைத்திருக்கிறார். உலகத்தோற்றத்திற்கு முன்னே நம்மைத் தெரிந்து கொண்டு நமக்காக ஜீவனைக் கொடுத்து, மீட்ட ஆண்டவர் நம் விருப்பத்தின்படி வாழ விரும்புவதில்லை. கிரயத்துக்கு கொண்டவர், பவுலைத் தெரிந்து கொண்டபோது, அவருக்கு மிகத் தெளிவாக என்ன செய்ய வேண்டும் என வெளிப்படுத்துகிறார். “அவன் புறஜாதிகளுக்கும் ராஜாக்களுக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக நான் தெரிந்து கொண்ட பாத்திரமாயிருக்கிறான்”. (அப்போஸ்தலர் 9:15).

**தெரிந்து கொள்ளப்பட்டவர்களுக்கு தேவன் வழங்கும் பணிகள்:**

தேவஊழியத்தை செய்கிற அநேகர் தேவன் எதற்காக தம்மைத் தெரிந்து கொண்டார் என அறிந்து கொள்ளாமல் சபையை விட்டு, சபை இயக்கங்களை விட்டு தாவிக்கொண்டே வாழ்ந்து விடுகிறார்கள். இன்னும் சிலர் மெகா சபைகளை உருவாக்க வாழுகிறார்கள். சிலர் மாபெரும் கூட்டங்களை இயேசுவுக்காக (?) கூட்டிவிட

நினைக்கிறார்கள். சிலருடைய பெரிய ஏக்கம் என்னவென்றால் தீர்க்கதரிசனங்களை உரைத்து, பிசாசுளைத் துரத்தி அற்புதங்களை செய்வது. ஆனால், இவைகள் எல்லாம் தேவசித்தமா என்பதே மாபெரும் கேள்வி. இவையெல்லாம் ஆண்டவரால் எனக்குக் கொடுக்கப்பட்ட பணிகளின் பட்டியலில் வராவிட்டால் நான் அக்கிரமக்காரன் என எண்ணப்படுவேன் என்பது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வார்த்தை (மத்தேயு 7:23).

தேவசித்தத்தை தவறவிடும் ஊழியங்கள் பரிதாபத்திற்குரிய ஊழியங்களே (மத்தேயு 7:23). ஆண்டவரே நீர் யார்? என்று கேட்டறிந்து, பின் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர் என தங்களை ஒப்புக் கொடுத்து, தான் செய்ய வேண்டிய பணிகளின் பட்டியலைப் பெற்றுக் கொள்ளாமல் எப்படியோ வாழ்ந்து விடுவதும் ஆபத்தான வாழ்க்கையே. கடைநிலை கிறிஸ்தவர்களில் இருந்து முதுநிலை ஊழியர்கள் வரை அதாவது கிறிஸ்தவர்கள் (சீடர்கள்) என்று சொல்லிக் கொள்ளுகிற யாவரும், உலகத்தோற்றத்திற்கு முன்பே தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் என மார்தட்டி, எதற்காக தாங்கள் தெரிந்து கொள்ளப்பட்டோம் என்ற தேவதிட்டத்தை, தேவசித்தத்தை, தரிசனத்தை இழந்து வாழுவது வீணான ஒரு வாழ்க்கையே.

நான் விமானத்தில் பறந்ததுண்டு. ஏறக்குறைய 30 இலட்சம் சிறிய பெரிய உதிரிபாகங்களால் இணைக்கப்பட்டுள்ள அந்த விமானம் அநேகரை அற்புதமாக குறைந்த நேரத்தில் குறிப்பிட்ட இடத்திற்கு எடுத்துச் செல்லுகிறது. 30,00,000 உதிரிபாகங்களில் சில இடம் மாறினாலும், விழுந்து விட்டாலும் இந்தப் பெரிய விமானம் செயல்படவியலாது. மாறாக விபத்துக்குள்ளாகும் அபாயம் இருக்கிறது. தேவன் நம்மை எந்த இடத்தில் வைத்திருக்கிறாரோ அல்லது என்னவிதமான ஊழியம் செய்ய அழைத்திருக்கிறாரோ அதைச் செய்வதே அல்லது அந்த இடத்தில் பொருந்தியிருப்பதே சாலச்சிறந்தது. மாறாக நம்மை முன்னிறுத்தப் பார்க்கும்போது அல்லது சுகபோகமான வாழ்க்கையை விட்டுவிடுவதற்கு மனமில்லாதிருக்கும்போது, தேவனுடைய ஊழியத்தை செய்வதில் தடங்கல் இருக்கும், கடைசி நாளில் நமக்கு அது சாபமாக அமையும்.

தேவன் தம்முடைய அனந்த ஞானத்தாலும் கிருபையாலும் தமது திட்டத்தையும் சித்தத்தையும் நிறைவேற்ற வல்லவராக இருக்கிறார். அவர் சகலத்தையும் ஆளுகிற சர்வ வல்லமையுள்ள தேவன். அவருடைய திட்டத்தை யாரும் மாற்றவியலாது.

நான் ஆண்டவரை அறிந்து கொண்டே வரும்போது, தொடர்ந்து அவர் சித்தம் செய்ய அர்ப்பணித்துக்கொண்டே வரும்போது, நான் என் வாழ்வில் அவர் நாம மகிமைக்கு நான் செய்ய வேண்டிய பணிகளை வெளிப்படுத்துகிறார். நான் அதை சரியாய் செய்யும்போதே, பவுலோடு கூட சேர்ந்து ... நான் அந்த பரம தரிசனத்திற்கு கீழ்ப்படியாதவனாயிருக்கவில்லை என்று கூற முடியும்.

## “நாபோத்திற்கு நடந்த அநியாயம்”

(எலியாவின் வாழ்க்கை வரலாறு)

அறிவு

ஆகாப் என்னும் இஸ்ரவேலின் அரசனுக்கு இரண்டு அரண்மனைகள் இருந்தன. ஒன்று சமாரியா என்னும் ஊரிலும் மற்றொன்று யெஸ்ரயேல் என்னும் ஊரிலும் இருந்தது.

கர்மேல் மலையில் நடந்த மாபெரும் வெற்றிக்குப்பின், எலியாவாகிய நான் பல மைல்கள் தூரம் அரசனுடைய இரதத்திற்கு முன்பாக மழையில் நனைந்துகொண்டு ஓடிவந்தது, அந்த யெஸ்ரயேல் என்னும் ஊருக்குத்தான். அடுத்த நாள் யேசபேலின் அச்சுறுத்தலுக்கு அஞ்சி ஓடியதும், அந்த ஊரில் இருந்துதான்!.

யெஸ்ரயேல் ஊரில் இருந்த அரண்மனைக்குப் பக்கத்தில் ஒரு அழகான திராட்சைத் தோட்டம் இருந்தது. அதன் உரிமையாளர் நாபோத் என்னும் சாதாரண விவசாயி.

ஆகாப் மன்னனுக்கு அந்தத் திராட்சத்தோட்டத்தை வாங்கி ஒரு கீரைக்கொல்லையாக்க ஆசை. எனவே, நாபோத் என்னும் அந்த விவசாயியை அழைத்து, ‘உன்னுடைய திராட்சைத்தோட்டம் என் அரண்மனைக்கு அடுத்து உள்ளது. அதை எனக்கு விற்றுவிடு. அதைப்பார்க்கிலும் சிறந்த தோட்டத்தை அதற்குப் பதிலாகத் தருவேன் அல்லது அதன் விலையான பணத்தைத் தருவேன்’ என்றான்.

நாபோத்திற்கு மோசேயின் நியாயப்பிரமாணம் நினைவில் வந்தது. ‘இஸ்ரவேல் புத்திரர் அவரவர் தங்கள் பிதாக்களுடைய கோத்திரத்தின் சுதந்திரத்திலே நிலை கொண்டிருக்கவேண்டும்’ (எண்ணாகமம் 36:7) என்ற வசனப்படி, அந்த நிலத்தை அவர் விற்க முடியாது. ஆகவே அரசனாகிய ஆகாபை நோக்கி, ‘நான் என் பிதாக்களின் சுதந்திரத்தை உமக்குக் கொடாதபடி கர்த்தர் என்னைக் காப்பாராக’ என்று உறுதியாகக் கூறிவிட்டான்.

ஒருவேளை, ‘அரசரே, நான் நியாயப்பிரமாணமான கர்த்தரின் வார்த்தைக்குக் கீழ்ப்படிய விரும்புகிறேன். ஆகவே உங்களின் ஆசையை நிறைவேற்ற முடியாது. மன்னிக்கவும்’ என்று அமைதியாகக் கூறியிருக்கலாம்.

கடவுளா அல்லது அரசரா என்னும் நிலையில் கடவுளைத் தேர்ந்தெடுத்த மனிதன் அந்த நாபோத் என்னும் விவசாயி.

கடவுளுக்குப் பயப்படாத ஆகாப் என்னும் அந்த அரசனுக்கு மிகுந்த ஏமாற்றம். வெறுப்பும், கோபமும், சலிப்புமாகத் தன் அரண்மனைக்குத் திரும்பினான். சிறுபிள்ளைத்தனமாக சாப்பிடாமலே படுத்துக்கொண்டான்.

அவன் மனைவி யேசபேல், அவனிடம் வந்து, ஏன் அவன் சாப்பிடாமல்

படுத்துக் கொண்டிருக்கிறான் என்று கேட்டபோது, நாபோத்தின் பதிலைக் கூறுகிறான். அவள் ஒருவேளை சிரித்துக்கொண்டே கீழ்க்கண்டவாறு கூறியிருப்பாள்: "நீர்தான் இப்போது இஸ்ரவேலின் அரசர் என்பதை மறந்துவீட்டீர்போல. இதை நான் பார்த்துக்கொள்ளுகிறேன். இன்னும் சில நாட்களில் அந்த நிலம் உமது சொந்தமாகும். உங்கள் முத்திரையிடும் மோதிரம் மட்டும் என்னிடம் கொடுங்கள். இப்போது மகிழ்ச்சியாகப்போய் சாப்பிடுங்கள்' என்றவுடனே, அரசன் சாப்பிடப் போனான்.

யேசபேல் அந்தக் கடவுளையும், நியாயப்பிரமாணத்தையும் நம்பும் சாதாரண விவசாயியான நாபோத்தைக் கொல்லவும், அவன் நிலத்தை அபகரிக்கவும் ஒரு பயங்கரமான சதித்திட்டம் தீட்டினாள். சீதோனியரின் அரசராகிய ஏத்பகாலின் மகள் அவள் (1 ராஜா 16:31); அவர்கள் நாட்டில் அரசரை எதிர்த்தால் சாவுதான். அதே வழக்கத்தை உண்மைக் கடவுளை நம்பும் இஸ்ரவேலிலும் நிறைவேற்ற முடிவு செய்தாள். கொடுமையான கொலைத் திட்டத்தையும், கொள்ளையடிக்கும் திட்டத்தையும் உருவாக்கினாள்.

அவள் திட்டப்படி, நாபோத் வாழ்ந்த யெஸ்ரயேல் ஊரின் மூப்பர்களுக்கு (தலைவர்களுக்கு) ஆகாபின் அரச முத்திரையுடன் ஒரு கடிதம் எழுதினாள். அக்கடிதத்தில், 'உங்கள் ஊரில் ஒரு உபவாசக்கூட்டம் ஏற்பாடு செய்து, அதில் நாபோத்தை முன்னே உட்காரவையுங்கள், இரண்டு இழிவான மனிதர்களை ஏவிவிட்டு 'நாபோத் ஆண்டவரையும், அரசரையும் தூஷித்து இழிவாகப் பேசினான்' என்று பொய்ச்சாட்சி கூற வையுங்கள். அத்தகைய குற்றச்சாட்டுகளுக்குத் தண்டனையான கல்லெறிந்து கொல்லுதலை நாபோத்திடம் நிறைவேற்றுங்கள்' என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

யேசபேலுக்குப் பயந்ததாலும், அந்தக்கடிதமும் அரச முத்திரையுடன் வந்ததாலும், யெஸ்ரயேல் ஊரின் தலைவர்கள் (மூப்பர்கள்) அப்படியே செய்து, நாபோத்தைக் கல்லெறிந்து கொன்றார்கள். நாபோத் இறந்துவிட்ட செய்தியையும் யேசபேலுக்கு அனுப்பினார்கள்.

யேசபேலின் சதித்திட்டம் நிறைவேறியது. நியாயம் இல்லாத முறையில் ஒரு குற்றமற்ற மனிதனான நாபோத்தின் ரத்தம் சிந்தப்பட்டது. வேதனையுடன், கொடுமையான தண்டனையான கல்லெறிதல் மூலம் அவன் துடிதுடித்து இறந்தான்.

இந்தச் செய்தி எலியாவாகிய எனக்கு வந்தபோது, என் உள்ளம் கொதித்தது. என் உள்ளத்தில் தாவீதரசன் ஒருமுறை செய்த கொடுஞ்செயலும் நினைவில் வந்தது. அரண்மனையின் அடுத்தவீட்டில் குளித்துக்கொண்டிருந்த உரியா என்னும் வேறொரு மனிதனின் மனைவியை அரண்மனைக்கு வரவழைத்து, தவறான உறவு கொண்டது மட்டுமன்றி, அவள் கணவனான உரியாவின் சாவுக்கும் ஒரு தீய திட்டத்தை வகுத்து நிறைவேற்றினார் அந்த தாவீது.

அது ஒரு மாபெரும் அநியாயம். ஆனால் ஆண்டவரால் அதைப்

பொறுத்துக்கொண்டிருக்க முடியவில்லை. என்னைப்போன்ற ஒரு தீர்க்கதரிசியான நாத்தானை தாவீதிடம் அனுப்பி, கண்டித்தார். தாவீதும் உடனடியாக மனந்திரும்பி, சங்கீதம் 51ஐ பாவ அறிக்கைப் பாடலாகப் பாடினார். கர்த்தர் அவரை மன்னித்தாலும், அவருடைய மகன் இறந்தான்.

நான் இதை நினைத்துக் கொண்டிருந்தபோது, கர்த்தருடைய வார்த்தைகள் எனக்கும் கீழ்க்கண்டவாறு வந்தன:

'எலியா, நீ எழுந்து சமாரியாவின் அருகேயுள்ள யெஸ்ரயேலுக்குப் போ. அங்கே அரசனான ஆகாப், தான் கொலை செய்த நாபோத்தின் நிலத்தை தனக்குச் சொந்தமாக்கப் போயிருக்கிறான். அவனைப் பார்த்து, நீ கொலை செய்தாய் – அடுத்தவன் நிலத்தை 'அநியாயமாய் அபகரித்துக் கொள்ளையடித்தாய். ஆகவே, எங்கே நாய்கள் நாபோத்தின் இரத்தத்தை நக்கினதோ, அங்கேயே உன்னுடைய இரத்தத்தையும் நக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று சொல்.' என்றார்.

சில ஆண்டுகளுக்கு முன்னரும் இப்படிப்பட்ட ஒரு கடின செய்தியைத்தான் நான் ஆகாபிடம் சொன்னேன். அதற்குப்பின் பல்வேறு காரியங்களும், நிகழ்ச்சிகளும் நடந்துவிட்டன. ஆனால் அரசனான ஆகாப் மட்டும் மாறவேயில்லை. தன் மனைவியான யேசபேல் தூண்டிவிட்டபடி நடந்தான். கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதையே செய்தான்.

ஆண்டவரின் ஆற்றலும், வலிமையும், துணிவும் எனக்கு மீண்டும் வந்தன. எந்த பயமும் இல்லாமல் மீண்டும் ஆகாபை சந்திக்கக் கிளம்பி, பயணம் செய்து யெஸ்ரயேல் என்னும் ஊரை அடைந்தேன். அங்கே நாபோத்தின் நிலம் அருகே ஆகாபைச் சந்தித்தேன்.

என்னைப் பார்த்ததும் அரசனாகிய ஆகாபுக்கு வியப்பு ஒருபுறமும் கோபம் மறுபுறமும் வந்தன. ஒருவேளை அவனுடைய குற்றமுள்ள மனதும் தாக்கியிருக்கலாம். அவன் என்னை நோக்கி, "என் எதிரியே! என்னைக் கண்டுபிடித்துவிட்டாயா?' என்றான். அவன் உள்ளம் நடுங்குவதை அவன் முகம் காட்டிற்று.

நான் மறுமொழியாகக் கீழ்க்கண்டவற்றை அஞ்சாமல் கூறினேன். 'ஆம், நான் உன்னைக் கண்டுபிடித்து விட்டேன். கர்த்தரின் பார்வையில் பொல்லாப்பானதைச் செய்ய, நீ உன்னை விற்றுப்போட்டாய். ஆண்டவர் உனக்குத் தீங்கு வரச்செய்வார். உன் சந்ததி அழியும். ஆண்டவருக்குப் பெருங்கோபத்தை உண்டாக்கிவிட்டாய். ஆகவே நேபாத்தின் மகன் யெரொபெயாமின் குடும்பத்துக்கும், அகியாவின் மகன் பாஷாவின் குடும்பத்துக்கும் செய்ததுபோல உன் குடும்பத்துக்கும் செய்வேன் என்று கர்த்தர் சொன்னார்' என்றேன்.

ஆகாப் அதிர்ச்சியடைந்து நின்றான். நான் கர்த்தரின் ஏவுதலால் தொடர்ந்து பேசினேன்: 'உன் மனைவி யேசபேலைப்பற்றியும் கர்த்தர் இப்படிச் சொல்லுகிறார்: யெஸ்ரயேல் நகரின் மதில் அருகே அவளை நாய்கள் தின்னும்.

அதுமட்டுமல்ல உன் சந்ததியில் பட்டணத்தில் சாகிறவனை நாய்களும், வெளியே சாகிறவனை ஆகாயத்துப் பறவைகளும் தின்னும். ஏனென்றால் கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாகத் துரத்திவிட்ட எமோரியரின் உருவச்சிலைகளை வழிபடும் அளவுக்கு உன்னை இழிவாக்கிவிட்டாய். இந்த நாட்டையும் கெடுத்துவிட்டாய்.'

என் வார்த்தைகளை (அல்ல கர்த்தரின் வார்த்தைகளைக்) கேட்ட ஆகாப் நடுநடுங்கினான். தன் உடைகளைக்கிழித்துக் கொண்டான். தன்னுடைய உடலில் இரட்டு என்னும் சாக்கு உடைகளை உடுத்தி, உபவாசம் பண்ணினான். சாக்கு உடைகளான இரட்டில் படுத்து மிகவும் தாழ்மையாக நடந்துகொண்டான். மிகுந்த துயருடையவர்களும், மனந்திரும்புகிறவர்களும் உண்மையான தாழ்மையுடையவர்களும் மட்டும் செய்யக்கூடிய செயல்கள் அவை. அது எனக்கே வியப்பாக இருந்தது.

ஆண்டவரின் வார்த்தை எனக்குத் திரும்பவும் வந்தது. அவர் இப்படிச் சொன்னார்: 'ஆகாப் எனக்கு முன்பாகத் தன்னைத் தாழ்த்தியதை கண்டாயல்லவா? அவன் எனக்கு முன்பாகத் தாழ்த்தியபடியால், நான் அவன் நாட்களில் தீங்கை வரப்பண்ணாமல், அவன் மகனுடைய நாட்களில் அதை அவன் குடும்பத்தின்மீது வரப்பண்ணுவேன்' என்றார்.

ஆண்டவர் மனம் இரங்குகிற தேவன் – மக்கள் உண்மையில் மாறும்போது அவர்களை மன்னிக்கிற கர்த்தர். அதை நான் என் வாழ்விலும் உணர்ந்திருக்கிறேன். இப்போது ஆகாப் வாழ்விலும் பார்க்கிறேன்.

நாபோத்திற்கு நடந்த அநியாயத்திற்கு நியாயம் கிடைத்துவிட்டது என்ற மனநிறைவோடு என் இல்லம் சென்றேன்.

பெருமழை தொடர்ந்து பெய்யும்...

# 2024 மார்ச் மாத வேத வினாக்களுக்கு விடைகள்

## ஆகாய் 1-2 அதிகாரங்கள்

**பொருத்துக**

1. கூலி – பொத்தலான பை 1:6
2. வானம் – பூமி 2:6
3. கருக்காய் – கல் மழை 2:17
4. நிலம் – மலை 1:11
5. மச்சு – வீடு 1:4

**கோடிட்ட இடங்களை நிரப்புக**

1. வழிகளை, சிந்தித்துப், கர்த்தர் 1:7
2. வெள்ளியும், பொன்னும், சேனைகளின், கர்த்தர் 2:8
3. ஆலையின், ஐம்பது குடம், இருபது குடம் 2:16
4. திரளாய், கொஞ்சமாய், அறுத்துக், புசித்தும் 1:6
5. திடன் கொள், ஜனங்களே, வேலையை 2:4

**விடை எழுதுக**

1. செயல்த்தியேலின் குமாரன் 2:2
2. செருபாபேல், யோசுவா, ஜனத்தில் மீதியானவர்கள் 1:14
3. முந்தின ஆலயத்தின் மகிமையைப் பார்க்கிலும், பிந்தின ஆலயத்தின் மகிமை பெரிதாயிருக்கும் 2:9
4. 2:19
5. வானத்தையும், பூமியையும், சமுத்திரத்தையும், வெட்டாந்தரையையும் 2:6.

தோப்பூர் நினைவுகள் 11



# போஸ்ட் மாஸ்டர் வீடு

Dr.N.J. ஞானையா

50 ஆண்டுகளுக்கு முன்னால் நாங்கள் தோப்பூரில் குடியிருந்தபோது அதுதான் பணித்தளம்; அது மட்டுமல்ல எங்கள் வீடுதான் இயக்கத்தின் ( மிஷனின்) அலுவலகம். டொக் டொக் என்று சத்தம்போடும் ஒரு டைப் ரைட்டர் மெஷின் என்னிடம் இருந்தது. அதிலே இரவுகளில் டைப் அடிப்பேன். அந்தச் சத்தம் ஊரெங்கும் கேட்டிருக்கிறது !

நான் டைப் அடிப்பதை "அச்சடிப்பது" என்று ஊர் பேசிக்கொள்ளும். அப்படி அச்சடித்த கடிதங்கள் இரண்டோ அல்லது மூன்றோ ஒவ்வொரு நாளும் அனுப்புவேன். அந்த ஊரில் தபால் அலுவலகம் தனியாக இல்லை. போஸ்ட் மாஸ்டரின் வீடுதான் தபால் அலுவலகம். நமக்கு வரும் தபால்களை வாங்க அவர் வீட்டிற்குச் செல்லவேண்டும். நாம் அனுப்ப வேண்டியவைகளையும் அவரிடம் நேரில் கொடுக்கவேண்டும். ஒவ்வொரு மதியமும் அருகிலுள்ள திருநகரில் உள்ள தபால் நிலையத்திலிருந்து ஒருவர் ஊருக்கு வரும் கடிதங்களைக் கொடுத்துவிட்டு இங்குள்ள கடிதங்களை எடுத்துச் செல்லுவார்.

அந்த போஸ்ட்மாஸ்டர் வீட்டில் (அல்லது தபால் அலுவலகத்தில்!) எப்போதும் வேலையில்லாத சில ஆண்கள் உட்கார்ந்து (வெட்டிக்) கதைகள் பேசிக்கொண்டு இருப்பார்கள். யாருக்குக் கடிதங்கள் வருகின்றன என்றும், யாரிடமிருந்து கடிதங்கள் போகின்றன என்றும் பார்த்துக்கொண்டிருப்பார்கள். சில சமயங்களில் ஊழியத்திற்கு மக்கள் அனுப்பும் காணிக்கை "மணியார்டர்" மூலம் வரும். வாரம் ஒருமுறையோ அல்லது இருமுறையோ ஒன்று அல்லது இரண்டுபேர் பணம் அனுப்புவார்கள். அப்படி அனுப்பப்பட்ட பணமும் 10 ரூபாய் அல்லது 20 ரூபாய் பெறுமானமான சிறிய தொகையாகத்தான் இருக்கும்.

தோப்பூர் என்னும் அந்தச் சிறிய ஊருக்கு மணியார்டர் மூலம் பணம் வந்தது ஒருவேளை எங்களுக்கு மட்டும்தான் என்று நினைக்கிறேன். அது அங்கே உட்கார்ந்து கதைபேசும் ஆண்களுக்கு வியப்பைத் தந்திருக்கலாம். சிறிய ஊர் என்பதால் அதை அவர்கள் ஊரெங்கும் பரப்பியிருக்கலாம். ஆகவே ஊரிலே நாங்கள் பெரிய பணக்காரர்கள் என்ற ஒரு வதந்தியும் பரவியிருந்திருக்கிறது (!!)

ஒரு நாள் அந்த போஸ்ட் மாஸ்டர் மனைவி ஒரு பித்தளைப் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு என் மனைவி ரஞ்சினியிடம் வந்து, "அம்மா, இதை அடகாக வைத்து 15 ரூபாய் தாருங்கள். அடுத்த மாதம் திருப்பிக்கொள்ளுவேன்" என்றார்கள். அதிர்ச்சியடைந்த ரஞ்சினி, "எங்களுக்கே மிகவும் பண நெருக்கடி; இரண்டாவது இப்படி

அடகு வாங்கும் பழக்கமும் இல்லை” என்றவுடன் அவர்களுக்கு மிகுந்த கோபம் வந்துவிட்டது.

“உங்க வீட்டு ஐயா, அச்சடித்து, அச்சடித்துக் கடிதம் போடுராரு. ராசாங்கம் எந்நேரமும் மணியாடர்மூலம் பணம் அனுப்புது. ஏன் இப்படி பணநெருக்கடி என்று கதை (பொய்) சொல்றீங்க. எங்க தேவைக்கு ஒதவி செய்ஞ்சா என்ன?” என்று கோபமாகப் பேசிவிட்டுச் சென்றார்கள்.

மற்றொரு நாள் காலையில் சில பெண்கள் எங்கள் வீட்டுக்கு வந்தார்கள். பொதுவாக அந்த நாட்களில் தமிழக சிற்றூர்களில் (மற்ற இடங்களிலும்) வீட்டுக்கதவை மூடி வைப்பதில்லை. பகல் முழுவதும் திறந்துதான் இருக்கும். (அதனால்தான் "திறந்த வீட்டிலே நாய் நுழைந்தமாதிரி" என்னும் சொல்வழக்கு வந்தது போல !!).

திடீரென்று நுழைந்த அவர்கள் நேரடியாக சமையல் அறைக்குப்போனார்கள். அங்கே சமைத்துக்கொண்டிருந்த என் மனைவி ரஞ்சினியிடம், “ஒங்க வீட்டிலே சத்தம்போடும் ஒரு இட்லிசட்டி இருக்குன்னு சொன்னாங்க. அதைப் பாத்துட்டுப் போக வந்தோம்” என்றார்கள். அதே சமயம் இட்லி தயாரிப்பும் நடந்தது. இட்லி வெந்தவுடன் அந்தச் சட்டியும் ஒரு விசில் அடிக்கும் சத்தம் எழுப்பியது.

“அம்மாடியோ, என்னமா கத்தது ? எம்புட்டு விலெ ? ஒருபெண்ணின் கேள்வி !

அதன் விலைய ரஞ்சினி கூறியவுடன் அடுத்தபெண், “இதெல்லாம் இவங்க மாரி, பணக்காரங்க வாங்கவேண்டிய பொருள். நம்மளால எல்லாம் வாங்க முடியாதப்பா” என்று கூறினாள். பின்னர் ஆச்சரியமாக ஒவ்வொரு பொருளையும் பார்த்து, அது என்ன, இது என்ன அதன் விலை என்ன? இதன் விலை என்ன? என்று விசாரித்துவிட்டு எல்லாரும் போனார்கள்.

கண்டிப்பாக ஊர் முழுதும் அந்தச் செய்தி பரவியிருக்கும் என்பதில் ஐயமில்லை.

......

சில மாதங்கள் கழித்து ஒருநாள் காலை. நான் என் அறையில் படித்துக்கொண்டிருந்தேன்.

இரண்டு ஆண்கள், வெளியே இருந்து , “ ஐயா, ஐயா இயேசுக்கார ஐயா” என்று கூப்பிட்டார்கள்.

வெளியே வந்தேன். அவர்கள் கையில் ஒரு சிறிய நோட்டு இருந்தது. ஒருவர் சொன்னார். “அடுத்த மாதம் நம்ம ஊர்ல, சாமிகும்புடு நடக்கப்போகுது. அதற்காகப் பணம் திரட்ரோம். ஒங்க நன்கொடைய கொடுத்து, இந்த நோட்ல ஒங்க பேரை எழுதுங்க.

நான் கேட்டேன்: “ சாமி கும்பிட எதுக்குங்க நன்கொடை ?”

அடுத்தவர் பதில்: “அதாவது, ஐயா, மைக்செட் கட்டி இரண்டு மூனு நாள் பாட்டு படிக்கும். பந்தல்போட்டு நாடகம் நடத்துவோம். இந்த வருஷம் ஒரு சினிமா காட்டலாம்னுகூட நினைக்கிறோம். அதுக்கெல்லாம் செலவாகுமில்ல. அதுக்குத்தான்

இந்த நன்கொடை!"

நான் சொன்னேன்: "எனக்கு அந்தச் சாமிமேல நம்பிக்கையில்லை. இயேசு சாமிதான் உண்மைத்தெய்வம்னு உங்களுக்கெல்லாம் சொல்லத்தான் இந்தக் கிராமத்திலே வந்து தங்கியிருக்கேன். என்னிடம் வந்து ஒங்க சாமிகும்பிடவதற்குக் காசு கேட்டால் கொடுக்கமுடியுமா ? மன்னிக்கவும் என்னால் முடியாது."

இரண்டுபேரும்: "இதெல்லாம் ஊர்க்கட்டுபாடுங்க. நீங்க கண்டிப்பாகக்கொடுக்கணும்."

நான் (உறுதியாக); "அதெல்லாம் முடியாது. ஏதாவது ஏழைகளுக்கு உதவி, மாணவர்களுக்கு உதவி என்றால் செய்வேன். இப்படி சாமிகும்பிடுக்குக் கொடுக்க முடியாது. நீங்க போகலாம்."

இருவரும்: (சற்று ஏமாற்றத்துடன் சென்றுகொண்டே) "பெரிய பணக்காரரே இப்படிச் சொன்னால் என்ன செய்வது?"

.........

இப்போது யோசித்துப்பார்த்தால் நாங்கள் பணக்காரர்கள் என்ற ஒரு தவறான எண்ணத்தை அந்தப் போஸ்ட் மாஸ்டர் வீடும், அங்கே இருந்த வேலையற்ற ஆண்களும் பரப்பியிருக்கிறார்கள்.

ஆகவே பணத்தை வைத்துக்கொண்டு, தேவைகளைச் சந்திக்காத ஊழியர்களாகவும், சத்தம் போடும் இட்லிச்சட்டி போன்ற பணக்காரர் வீட்டில் இருக்கும் பாத்திரங்களை வைத்திருக்கிறவர்களாகவும், அவர்களுடைய சாமிகும்பிடும் ஊர்க்கட்டுப்பாட்டுப் பணியில் ஈடுபாடு கொள்ளாத (ஒத்துழைப்புக்கொடுக்காத) ஒரு குடும்பமாகவும் அங்கே நாங்கள் வாழ்ந்திருக்கிறோம்.

இன்று நான் நினைப்பது, ஊழியத்தளங்கள் ஊழியத்தளங்களாகவும், நிர்வாக அலுவலகம் தனியாக வேறொரு இடத்திலும் (மதுரை அல்லது சென்னை போன்ற நகரங்களில்) இருந்திருந்தால் இத்தகைய சிக்கல்களைத் தவிர்த்திருக்கலாம்.

ஒரே மொழிபேசும், ஒரே தமிழ்ப்பண்பாட்டைச் சேர்ந்த நாங்கள், சிற்றூர்களுக்குச் சென்று பணி தொடங்கிய காலத்தில் இருந்த சிக்கல்களையும், இன்று நமது இயக்கத்தின் ஊழியர்கள் சந்திக்கும் சிக்கல்களையும் பார்க்கும்போது நூறு அல்லது இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர் மேல் நாடுகளில் இருந்து வேற்றுமொழி, வேற்றுப் பண்பாடுகளிலிருந்து வந்த அருட்பணியாளர்கள் சந்தித்த சிக்கல்கள் எத்தனை அதிகமாக இருந்திருக்கும்!

அப்போஸ்தலர் 1:8 இல் நாம் வாசிக்கும் "பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்" என்ற வசனத்தை, 1974 ஆம் ஆண்டு சுவிட்சர்லாந்து நாட்டில் நடைபெற்ற லூசான் நகர உலக

சுவிசேஷ மாநாட்டில், டாக்டர் ரால்ப் வின்டர் என்னும் மிஷன் கல்வி பற்றிய நிபுணர் கீழ்க்காணும் மூன்று வகை நற்செய்திப்பணிகளாகப் பிரித்து விளக்கினார்.

எருசலேமிலும் யூதேயாவிலும் – யூதர்கள் யூதர்களுக்கு அறிவித்தல் **(நற்செய்திப்பணி 1).**

சமாரியாவிலும் – யூதர்கள் சமாரியர்களுக்கு அறிவித்தல் **( நற்செய்திப்பணி 2)**

பூமியின் கடைசிபரியந்தமும் – யூதர்கள் மற்ற மக்களுக்கு அறிவித்தல் **(நற்செய்திப்பணி 3).**

தமிழ்நாட்டில் இந்த மூன்றாவது வகை நற்செய்திப்பணியே தோமா அப்போஸ்தலரால் தொடங்கப்பட்டது. பின்னர் பிரான்சிஸ் சேவியர், சீகன்பால்க், ராபர்ட் டி நொபிலி, பிஷப் கால்டுவெல், ஏமி கார்மைக்கேல், ஜி.யு.போப், ராக்லந்து, ரேனியஸ், ரிங்கிள்டோபே, சான்ட்லர், வாஷ்பர்ன், லாய்ட் லார்பீர் போன்ற மக்களால் வளர்ந்தது. அவர்கள் செய்த தியாகங்களையும், பட்ட பாடுகளையும் நினைக்கும்போது நெஞ்சம் நெகிழ்கிறது. ஆண்டவருக்கு நன்றி செலுத்துவோம்.

நாம் இப்போது நற்செய்திப்பணியின் முதல் வகையைச் செய்கிறோம்.

தொடர்ந்து இப்பணி வளர மன்றாடுவோம்; ஈடுபடுவோம்.

**வளரும்...**

**FORM IV**

Statement about ownership and other particulars about newspaper

1. Place of publication : **Madurai**
2. Periodicity of its publication : **Monthly**
3. Printer's Name : **Sharon Print System**
   Nationality : **Indian**
   Address : 51/71. Ahimsapuram First Street, Near Saraswathi Theatre, Sellur, Madurai - 625002.
4. Publisher's Name : **Thirugnanam D.**
   Nationality : **Indian**
   Address :**No:4-2/9 Kamalavelu Illam, Poonga Nagar 2nd Street, A.Kosakulam, Madurai- 625017.**
5. Editor's Name : **Ponnuraj G.**
   Nationality: **Indian**
   Address : **J.S. Cottage, First Floor, 410-B. Andal Nagar Extension Main Road, W.Velacherry, Chennai - 600042.**
6. Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding. More than one per cent of the total capital. : **IRAI ARASU TRUST Nagamalai Pudur, Palkalai Nagar, Madurai - 625021.**

I, **Thirugnanam D.,** hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Date: March 27/03/2024 Signature of Publisher

# துதித்து மன்றாடுவோம்

ஞாயிறு

## தமிழ்நாடு - தென்னிந்தியா

**கள்ளக்குறிச்சி மாவட்டம் அருட்பணியாளர்: திரு. காவியகாந்த் -திருமதி.செல்வி**

நற்செய்திப்பணி செய்யப்பட்ட காட்டுவளவு, பாச்சேரி, கெங்கவாடி, மேல வென்னியூர், கென்டிக்கல், கொட்டப்புத்தூர், எருக்கம்பட்டு, எழுத்தூர், நாரணம்பட்டி, ஊத்துக்காடு ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட ஆறுமுகம், முத்தம்மா, மகாலிங்கம், பார்வதி, நந்தகுமார், கதிரேசன், உமா, அருள், கண்ணன், வெங்கடேசன் ஆகியோருக்காகத் துதிப்போம். ஹரிதா (வாய் மூக்கு வழியாக இரத்தம் வருகிறது), ஆறுமுகத்தின் மனைவி ஆகியோர் நிறைவான சுகம் பெற, மந்திரவாதி ஆறுமுகம் மற்றும் நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**கடலூர் மாவட்டம் அருட்பணியாளர் : திரு. M. லிங்கம் – திருமதி. கலா**

நற்செய்திப்பணி செய்யப்பட்ட அருகேரி, வடகரை, பெண்ணாடம், பொன்னேரி, எறப்பாவூர், கொல்லத்தங்குறிச்சி, தொளார், மருவத்தூர், கீழநெம்மேலி ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட இராமாயி, கலா, சந்திரா, ருத்ரேஷ்வரன், செல்வம், குழஞ்சியம்மாள், சுரேஷ், மணிமொழி, ராசி, மாயகிருஷ்ணன், சதீஷ், சுமதி, திவ்யபாரதி, பார்வதி, பூங்கா ஆகியோருக்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் : திரு. V.சிவராமன் – திருமதி. பெரியநாயகி**

நற்செய்திப்பணி செய்யப்பட்ட சுமைதாங்கி, கீரனூர், செம்பேரி, சின்ன கொசப்பள்ளம், இருளம்பட்டு ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட விஜய், ராகுல், சபரி, அஞ்சலை, சௌமியா, மாயவேல், வினோத், ராணி ஆகியோருக்காக, ஆனந்தியின் கணவர் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற்றதற்காகத் துதிப்போம். சாந்தி, சந்துரு ஆகியோர் ஆராதனையில் கலந்து கொள்ள, மணிகண்டன் இரத்த புற்று நோயிலிருந்து சுகம் பெற, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**நாமக்கல் மாவட்டம் அருட்பணியாளர் : திரு. S. சாமுவேல் – திருமதி. ரோகிணி**

நற்செய்திப்பணி செய்யப்பட்ட மணியன்கால்பட்டி, காக்காதோப்பு, பேட்டைப்பாளையம், வண்டிக்கேட்டு, மோகனூர், வாங்கல், ஆசிரியர் குடியிருப்பு, ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட மீனாட்சி, ஸ்வேதா, நவீனா, அழகுபிரியா, யோகவேலன், பெரியசாமி ஆகியோருக்காக, சித்ராவுக்கு தேவன் கொடுத்த சுகத்திற்காகத் துதிப்போம். சித்ரா இரட்சிக்கப்பட, சீடத்துவ பயிற்சியில் கலந்து கொள்ளும் சுதாகர், அனிதா, அருள், சுதா, பிரபு, லதா, வினிதா, நதியா ஆகியோர் விசுவாசத்தில் வளர ஜெபிப்போம்.

**ஈரோடு மாவட்டம் அருட்பணியாளர்: திரு. G.தனம் யோகராஜ் – திருமதி. டான்சி**

நற்செய்திப்பணி செய்யப்பட்ட சனிசந்தை, கரைமேடு, கோனார்பாளையம், யாதவநகர், கணவனூர், பு.தோட்டம், எம். தோட்டம், ஏழூர், குறுவை, எம்.பாளையம், மூங்கில்பாளையம், முரளி ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட பழனியம்மாள், பாரதி, எழில், கிருத்திகா, காசம்மாள், நித்யா, பரமேஸ்வரி, ராசம்மா ஆகியோருக்காக, புதிதாக ஆராதனையில் கலந்து கொள்ளும் சித்திகா, பழனியம்மாள், நித்யா, பரமேஸ்வரி, ராசம்மா ஆகியோருக்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் : திரு. அதிசய அமலன் – திருமதி. ஆனந்தி விமலா**

நற்செய்திப்பணி செய்யப்பட்ட வெட்டையம்பாளையம், ஆண்டிப்பாளையம், எலத்தூர், சானார்புதூர், பள்ளத்தூர் ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட கோபாலகிருஷ்ணன், குமார், கேசவன், முருகன், கௌசல்யா, நாகம்மாள், அருக்காணி ஆகியோருக்காக, முருகன் வீட்டில் ஜெபக்கூட்டம் நடைபெறுவதற்காக, புதிதாக ஆராதனையில் கலந்து கொள்ளும் குமார், கௌசல்யா, முருகன் ஆகியோருக்காகத் துதிப்போம். மரகதம், கீதா, பாஸ்கரன், சீனிவாசன், அமராவதி, கருப்பாயம்மா, ராஜம்மா, பாப்பாத்தி, பெரியசாமி ஆகியோர் விசுவாசத்தில் நிலைத்து நிற்க , நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**வேலூர் மாவட்டம்** **அருட்பணியாளர் :திருமதி. கிருபா ஏசுதாஸ்**

நற்செய்திப்பணி செய்யப்பட்ட விரிஞ்சிபுரம், செதுவாலை, வசந்தநடை, அஞ்சு நகர், தெல்லூர் ஆகிய கிராமங்களுக்காக, முருகன், பூங்கொடி ஆகியோர் ஆராதனையில் கலந்து கொண்டதற்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**கோயம்புத்தூர் மாவட்டம்**

**சுயசார்புத் திருச்சபை** **அருட்பணியாளர் : திரு. லூர்டஸ் – திருமதி. கிளாடிஸ்**

நற்செய்திப்பணி செய்யப்பட்ட பில்சின்னாம்பாளையம், நா.மு.சுங்கம், சமத்தூர் ஆகிய பகுதிகளுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட ஆனந்த், குணா, வசந்த், சந்திரகுமார், கலைச்செல்வி, சன்கரி, பார்வதி ஆகியோருக்காக, புதிதாக ஆராதனையில் கலந்து கொள்ளும் சரத்குமாருக்காகத் துதிப்போம். ரவிக்கு கண் அறுவைச் சிகிச்சை விரைவில் நடைபெற, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் : திரு. எபிநேசர் உவைட் – திருமதி. மேரி**

நற்செய்திப்பணி செய்யப்பட்ட தொண்டாமுத்தூர், மேடு, பழையூர், மாமரத்துப்பட்டி, குருஞ்சேரி, குமாரபாளையம், அம்பேத்கார், புதுக்காலனி ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட ஈஸ்வரி, சாந்தி, சேத்தான், கருப்பாயி, வேணி, ஜெயா, கார்த்திகா, பிரேம், மகேஸ், வேலுச்சாமி ஆகியோருக்காக, புதிதாக ஆராதனையில் கலந்து கொள்ளும் கண்ணம்மாவுக்காகத் துதிப்போம். பிரேம், மணியன் ஆகியோர் ஆராதனையில் கலந்து கொள்ள, தினேஷ், திவ்யா ஆகியோரின் திருமணம் தடையின்றி நடைபெற, நாத்தான்வேலுக்கு நிரந்தர வேலை கிடைக்க ஜெபிப்போம்.

**சுயசார்புத் திருச்சபை**

**அருட்பணியாளர் : திரு. இம்மானுவேல் கிளமென்ட் கிப்ட்சன் – திருமதி. செல்லாண்டீஸ்வரி**

நற்செய்திப்பணி செய்யப்பட்ட நாட்டுக்கல்பாளையம், காசிப்பட்டணம், தளவாய்பாளையம், வீரல்பட்டி, அம்மையகவுண்டனூர், பழையூர், நாச்சிபாளையம், வஞ்சியாபுரம் ஆகிய கிராமங்களுக்காக, மனோகரன் மரணபயத்திலிருந்து விடுதலை பெற்றதற்காகத் துதிப்போம். சந்தோஷ் குடும்பம், ரூபி, ஜோசுவா மற்றும் நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட, முள்ளுப்பட்டி மலைவாழ் மக்கள் நடுவில் ஆராதனை ஆரம்பிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் : திரு. R. ஸ்டீபன் செல்வகுமார்– திருமதி. கரோலின்**

நற்செய்திப்பணி செய்யப்பட்ட வாழைக்கொம்பு, நாகூர், பூச்சனாரி, ஆனைமலை, புது காலனி, அம்பராம்பாளையம், சோமந்துரை சித்தூர் ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட திருமாத்தாள், வனிதா, கமலம்மாள், மாரியம்மாள், ஆண்டாள், கோபால், கிருஷ்ணன், பவித்ரா, துரோவதியம்மாள், முகம்மது அச்சில் மஜலி, நவின், சாராள் ஆகியோருக்காகத் துதிப்போம். பழனி, வெள்ளையம்மா, கன்னியம்மா, மாரியம்மா ஆகியோர் தடையின்றி திருமுழுக்கு எடுக்க, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்

**திருப்பூர் மாவட்டம்–** **அருட்பணியாளர்: திரு. S. பாலசௌந்திரன்– திருமதி. மரியாள்**

நற்செய்திப்பணி செய்யப்பட்ட குருணைக்கல்பட்டி, பிச்சைக்கல்பட்டி, சின்னமருதூர், கம்பளியம்பட்டி, உப்புத்துறை ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட கன்னையன், பழனியம்மாள் ஆகியோருக்காக, ஜீவா, செந்தில் ஆகியோருக்கு தேவன் கொடுத்த சுகத்திற்காக, பிரகாஷ் மனநோயிலிருந்து சுகம் பெற்றதற்காக, செந்திலுக்கு கிடைத்த சுகத்திற்காகத் துதிப்போம். மனோவா, ராமசாமி, மாயகிருஷ்ணன் ஆகியோர் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற, ஜீவா, உமா ஆகியோருக்கு நல்ல வேலை கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் : திரு.G. பால்துரை – திருமதி. ஜெபரூபி**

நற்செய்திப்பணி செய்யப்பட்ட பாப்பாவலசு, சுள்ளிபெருக்கிப்பாளையம், புதுக்கோட்டை, பெருமாள் கோவில்வலசு, நாச்சிப்பாளையம், மூக்குத்தரிச்சாம்பாளையம், சர்க்கரை வலசு, கிளாங்குண்டல், வெள்ளக்கோவில், புதுக்கோட்டை, அறிவொளி நகர் ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட சிவகாமி, சுப்பிரமணி, பிரியா, செல்வி, தாமரை, செல்வி, தமிழ்செல்வி, ஜோதிமலை, பாலன், சின்னப்பராஜ், விஜயா ஆகியோருக்காக, புதிதாக ஆராதனையில் கலந்து கொள்ளும் சிவகாமி, நிஷா, விஜயா, பிரசன், கிப்சன் ஆகியோருக்காக, தேவிக்கு 8 வருடத்திற்குப் பின் குழந்தை பாக்கியம் கிடைத்ததற்காகத் துதிப்போம். தர்ஷிகா (மூளை வளர்ச்சி குறைபாடு) நிறைவான சுகம் பெற, அஸ்வந்த், கோபிநாத், அரசு பொதுத்தேர்வில் தேர்ச்சியடைய, பூசாரி சுப்பிரமணி இரட்சிக்கப்பட, அறிவழகன் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற ஜெபிப்போம்

**சுயசார்புத் திருச்சபை**

**அருட்பணியாளர் : அருள்திரு. சாலமோன்ராஜ் – திருமதி. ஜெயக்கொடி**

நற்செய்திப்பணி செய்யப்பட்ட தேவனூர் புதூர், ராவணபுரம், சின்னபொம்மன்சாலை, பாரைமடை, செல்லப்பம்பாளையம், அர்த்தநாரிபாளையம், ரெட்டியார்ஊர், பருத்தியூர், ஆண்டியூர் ஆகிய கிராமங்களுக்காக, வெண்ணிலா, சுமதி, கோபால், ராஜம்மாள், பாக்கியலட்சுமி, ஜோதி திருமுழுக்கு பெற்றதற்காக, கோபால், ராஜம்மாள், செல்வராஜ், லட்சுமி ஆகியோரின் வீடுகளில் ஜெபக்குழு ஆரம்பிக்கப்பட்டதற்காக, ரவி, சாந்தி, அமலா, அருக்காணி, சாரா, சரஸ்வதி, ஆகியோர் மீண்டும் ஆராதனையில் கலந்து கொண்டதற்காக, புதிதாக ஆராதனையில் கலந்து கொள்ளும் ஜான்சி, குமார், பாபு, ரெபேக்காள், இராமச்சந்திரன், விஜயா ஆகியோருக்காகத் துதிப்போம். சாரதாமணி, ஏசுதாஸ், பிளஸி, சகாயமேரி ஆகியோருக்கு அரசுப் பணி கிடைக்க, மாசில்லாமணி, லட்சமி, பாக்கியா, முருகாத்தாள், சிவபிரகாஷ், உமாபதி, சேகர் ஆகியோர் தடையின்றி ஆராதனையில் கலந்து கொள்ள, செல்லராணி, மாசிலா, தெய்வாத்தாள், பாக்கியா, மயிலாத்தாள் ஆகியோர் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**திங்கள்**

**திருச்சி மாவட்டம்**

**அருட்பணியாளர் : திரு. S.ஜெயக்குமார் – திருமதி. மரிய செல்வம்**

நற்செய்திப்பணி செய்யப்பட்ட உப்பிலியாபுரம், சோபனபுரம், மாராடி, வெங்கடாசலபுரம், கிருஷ்ணாபுரம், வைரிசெட்டிப்பாளையம், ஒக்கரை, புடலாத்தி, கோட்டப்பாளையம் ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட சுப்பையா, வேலாயுதம், சுரேஷ், பெரிய பெருமாள், சரவணன், இளங்கோவன், வெற்றிவேல், முருகானந்தம், குணசீலன், செந்தில், விஜயலட்சுமி, தீபிகா ஆகியோருக்காக, ஜெயசீலனுக்கு கிடைத்த சுகத்திற்காகத் துதிப்போம். நிவாஷ், அபி, அலெக்ஸ் ஆகியோருக்கு ஏற்ற வாழ்க்கைத் துணை கிடைக்க, கிருத்திகா கடன்பிரச்சனையிலிருந்து விடுதலை பெற, சரோஜா குடும்பத்தில் சமாதானம் கிடைக்க ஜெபிப்போம்.

**மதுரை மாவட்டம்**

**அருட்பணியாளர் : திரு. வின்சென்ட்**

நற்செய்திப்பணி செய்யப்பட்ட சின்ன வாகைக்குளம், முண்டுவேலம்பட்டி, கோட்டையூர், அழகுசிறை, புளியகவுண்டன்பட்டி, ஒத்தவீடு, கீழப்பச்சேரி, வலங்காகுளம் ஆகிய கிராமங்களுக்காகத் துதிப்போம். புதிய ஜெபக்குழுக்கள் உருவாக்கப்பட, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் : பிரவீன்குமார்–திருமதி. மீனா**

நற்செய்திப்பணி செய்யப்பட்ட T.அரசபட்டி, சமத்துவபுரம், நேசனேரி, சோழபுரம், பாறைக்குளம், கிருஷ்ணாபுரம், சுப்புலாபுரம், வலையங்குளம், கல்லணை, வெயிலுகந்தபுரம், தூம்பக்குளம், காமாட்சிபுரம், குளத்துவாய்பட்டி ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட கற்பகம், மோகன், கார்த்திகை செல்வம், மதன்குமார், குமார், சங்கர், பழனி, கிருஷ்ணன், சதீஸ்வரன் ஆகியோருக்காகத் துதிப்போம். மீனாவின் உடைந்த கால் சுகமாக, காமாட்சி, மதன் ஆகியோர் பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் : திரு. M. கார்த்தி – திருமதி. ரீஜா**

நற்செய்திப்பணி செய்யப்பட்ட பரமன்பட்டி, சென்னம்பட்டி, ரெட்டியப்பட்டி, புதுப்பட்டி, பாப்பிரெட்டிபட்டி, ஆண்டிப்பட்டி, பூசலாபுரம் ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட வெற்றி மாறன், சரண்யா, பாக்யா, மேகலா, பெருமாள், காசிமாயன், பாண்டித்தேவர், தனம், மீனா, ராமத்தாய், வீரலெட்சுமி ஆகியோருக்காக, புதிதாக ஆராதனையில் கலந்துகொண்ட லட்சுமியம்மா, பச்சையம்மாள், வனராஜா, அரவிந்த், ஜனனி, செல்வி, ராமர் ஆகியோருக்காக, எப்சிபாவுக்கு தேவன் கொடுத்த பெண் குழந்தைக்காகத் துதிப்போம். ராமகிருஷ்ணன், பெருமாள், ஆபிரகாம், பழனிச்சாமி, மகேந்திரன், கிரேஸி ஆகியோர் மீண்டும் ஆராதனையில் கலந்து கொள்ள ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் : திரு. A. கந்தசாமி – திருமதி. முருகம்மாள்**

நற்செய்திப்பணி செய்யப்பட்ட இந்திராநகர், காலனி, கீழ உரப்பனூர், தேவர் நகர், பள்ளக்காபட்டி, வாகைக்குளம் பிரிவு, தங்களாச்சேரி, குதிரைசாரிக்குளம், திருமங்கலம் பனைமரம் ஸ்டாப் ஆகிய பகுதிகளுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட செந்தில், ஜெயந்தி, முத்துக்காளை, லட்சுமி, சுகாசினி, பூபதி, வேல்முருகன் ஆகியோருக்காக, புதிதாக

ஆராதனையில் கலந்து கொள்ளும் வீரணனுக்காக, நெல்சனுக்கு கிடைத்த சுகத்திற்காக, சுமனுக்கு அரசு வேலை கிடைத்ததற்காகத் துதிப்போம். இந்திராணி, வீரணன் ஆகியோர் குடும்பமாக ஆலயம் வர, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் : திரு. P. சத்தியநாதன் – திருமதி. கிறிஸ்டி**

நற்செய்திப்பணி செய்யப்பட்ட குச்சம்பட்டி, ரெட்ரபட்டி, வெங்கடாசலபுரம், சத்திரப்பட்டி, வையூர், கண்ணாப்பட்டி, கோபாலபுரம், போத்தநதி, முத்துலிங்காபுரம் ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட கவிபிரியா, கமலா, கலைச்செல்வி, முத்துப்பிரியா, சித்ரா, கிருஷ்ணமூர்த்தி, முத்துவேல், சரண்யா, அருண்பாண்டி, முத்தையா ஆகியோருக்காக, டேவிட் பிரபாகரனுக்கு வேலையில் உயர்வு கிடைத்ததற்காகத் துதிப்போம். செல்லப்பாண்டிக்கு விரைவில் திருமணம் நடைபெற, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :திரு. P. ராஜா – திருமதி. அன்னாள்**

நற்செய்திப்பணி செய்யப்பட்ட கரடிக்கல், மொட்டைப்பாறை, பொம்மனம்பட்டி, குன்னனம்பட்டி, காந்தி நகர், எம்ஜிஆர் நகர் காலனி ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட மல்லிகா, வேலுச்சாமி, ஆர்த்தி, சதீஷ், மணிகண்டன், சுகன்யா, ஜெயபால், ஜெயந்தி, சுசீலா, தங்கவேல் ஆகியோருக்காக, புதிதாக ஆராதனையில் கலந்துகொண்ட நித்யா, சுகந்தி, சரவணன் ஆகியோருக்காக, திருமுழுக்கு எடுக்க ஆயத்தமாக உள்ள ஆனந்தி, அமுதா ஆகியோருக்காகத் துதிப்போம். அருண் கடன் பிரச்சனையிலிருந்து விடுதலை பெற, பாண்டியம்மாளுக்கு நிறைவான சுகம் கிடைக்க, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் : திரு. ஜெயராமன் – திருமதி. ஜீவா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட மொண்டிக்குண்டு, பசும்பொன்நகர், காமராஜ் நகர், மலைச்சாமிபுரம், அய்யனார்புரம், மாரிப்பட்டி, கட்டத்தேவன் பட்டி, T. இராமநாதபுரம், செம்பட்டி, பசும்பொன் நகர் ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட கர்ணன், சூர்யா, சசிரேகா, காசிமாயன், அமிர்தம், புவனா, கருப்பு, ஜோதி, ஒச்சம்மாள், பழனி, மாயக்காள், லட்சுமி ஆகியோருக்காக, நீதிக்கு தேவன் கொடுத்த சுகத்திற்காகத் துதிப்போம். கருப்பாயி, மீனா ஆகியோரின் குடும்பங்கள் இரட்சிக்கப்பட, வேபா பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண்கள் எடுக்க, ஊழியரின் மனைவிக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க, ராஜாவுக்கு நிரந்தர வேலை கிடைக்க ஜெபிப்போம்.

**சுயசார்புத் திருச்சபை**

**அருட்பணியாளர் : திரு. ஏனோக்–திருமதி.பாலின் சௌந்தர்யா**

நற்செய்திப்பணி செய்யப்பட்ட கல்யாணிப்பட்டி, கொடிக்குளம் காலனி, கே.ஜே.காலனி, கருகப்பிளை, உடன்காட்டுப்பட்டி, பிரவியம்பட்டி, ஜோதிமாணிக்கம் ஆகிய பகுதிகளுக்காக, சரண்யாவிற்கு கிடைத்த பெண் குழந்தைக்காக, அபிமன்னன், கருப்பாயி ஆகியோருக்கு கிடைத்த சுகத்திற்காக, பால்தாய் பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற்றதற்காகத் துதிப்போம். முத்துலட்சுமி கடன்பிரச்சனையிலிருந்து விடுதலை பெற, ஏசாவின் திருமணத் தேவைகள் சந்திக்கப்பட, நிகழ்மேத்யூ, ஜேசுதாஸ் ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

**சுயசார்புத் திருச்சபை**

**அருட்பணியாளர் : திரு. M. அகஸ்டின் – திருமதி. ஜோஸ்பின்**

நற்செய்திப்பணி செய்யப்பட்ட செல்லம்பட்டி, மணல்பட்டி, காந்திநகர், சங்கம்பட்டி, சக்கரபட்டி ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்டு ஆலயம் வந்த ஷாலினிக்காக, அமிர்தவள்ளி விபத்திலிருந்து பாதுகாக்கப்பட்டதற்காக, செல்லத்திற்கு வேலை கிடைத்ததற்காகத் துதிப்போம். ராமன் குடும்பத்தில் சமாதானம் கிடைக்க, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் : திரு. வினு –திருமதி. அன்னாள்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பெருங்காமநல்லூர், நரியம்பட்டி, வீரம்பட்டி, ஓணாப்பட்டி, அழகுரெட்டிபட்டி, காளப்பன்பட்டி, சிவநாதபுரம் ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட ராணி, நாதன், ரேவதி, தர்ஷினி, தவமணி, பூமிநாதன், ஷர்மிளா, சசிகுமார், மதிவேந்தன், கிருஷ்ணன், வள்ளி ஆகியோருக்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் : திரு. காளிமுத்து – திருமதி. குமுதா**

நற்செய்திப்பணி செய்யப்பட்ட உ.புதுக்கோட்டை, உச்சிக்கண்ணன்பட்டி, காலனி, பெருமாள்

கோவில்பட்டி, உத்தப்பநாயக்கனூர், இடையப்பட்டி ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட லட்சுமி, சுப்புலட்சுமி, பாண்டிச்செல்வி, பஞ்சவர்ணம், காமாயி, மகேஷ்வரன், கோகுல், ஜோதி, முத்துலட்சுமி ஆகியோருக்காக, காசிமாயன், லதா ஆகியோர் வீடுகளில் உபவாச ஜெபம் நடைபெற்றதற்காகத் துதிப்போம். மகேஷ்வரன் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற, சங்கரீஸ்வரி வலிப்பு நோயிலிருந்து சுகம் பெற, பஞ்சவர்ணம் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் : சகோதரி. எஸ்தர் செல்வராணி**

நற்செய்திப்பணி செய்யப்பட்ட லிங்கப்பநாயக்கனூர், கொப்பிலிப்பட்டி, அப்பனம்பட்டி, திம்மநத்தம், சுளிஒச்சான்பட்டி ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட கலா, பூமா, ராமன், குமுதா, மாயக்காள், தங்கம் ஆகியோருக்காக, ரதி இயேசுவை ஏற்றுக் கொண்டதற்காக, பிரியங்காவிற்கு தேவன் கொடுத்த சுகத்திற்காகத் துதிப்போம். பாண்டீஸ்வரி, அபி ஆகியோருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க, எஸ்தர், எப்சிபாஆகியோருக்கு சுகப்பிரசவம் கிடைக்க, காமராஜ், ரவி ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க, தேவிக்கு ஏற்ற வாழ்க்கைத் துணை கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் : அருள்திரு.M. மூவேந்திரன் – திருமதி. விஜயா**

நற்செய்திப்பணி செய்யப்பட்ட கணவாய்ப்பட்டி, நடுப்பட்டி, சேடபட்டி, அல்லிகுண்டம், சந்தைபட்டி, அயோத்திபட்டி, வகுரணி, சின்னகட்டளை ஆகிய கிராமங்களுக்காக, ஆனந்தக்குமார் ஆவிக்குரிய வாழ்வில் வளருவதற்காக, சீடத்துவ பயிற்சிகள் தொடர்ந்து நடைபெறுவதற்காக, அமுதாவின் மகளுக்கு தேவன் கொடுத்த சுகத்திற்காகத் துதிப்போம். முத்துப்பாண்டி, மகாராஜன், கமலக்கண்ணன், அர்ச்சுணா, தேவி, சின்னச்சாமி, கண்ணுச்சாமி, ரம்யா, அழகுத்தாய், சுருதி ஆகியோர் இரட்சிக்கப்பட, மரகதம், ராமாயி அம்மாள் ஆகியோர் மீண்டும் ஆராதனையில் கலந்து கொள்ள ஜெபிப்போம்.

**செவ்வாய்**

**அருட்பணியாளர் : திரு. A. பால்ராஜ் – திருமதி. ஏஞ்சல்**

நற்செய்திப்பணி செய்யப்பட்ட கூத்தியார்குண்டு, கருவேலம்பட்டி, காந்தி நகர், கப்பலூர், இலங்கை அகதிகள் முகாம் ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட மான்விழி, கண்ணன், காசி, திவ்யா, வினோதன், ஷஜி, வையாபுரி, ராஜன், சரவணகுமார், தனபாண்டி, வள்ளி, அமிர்தா, நாகராஜ், முருகன் ஆகியோருக்காக, புதிதாக ஆராதனையில் கலந்துகொண்ட மணி, ஜெயகுமார் ஆகியோருக்காகத் துதிப்போம். தனபாண்டி குடும்பத்தில் சமாதானம் கிடைக்க, ஆஷா மனநோயிலிருந்து சுகம் பெற ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் : திரு. G. ஜெகன் – திருமதி. திவ்யா**

நற்செய்திப்பணி செய்யப்பட்ட உச்சப்பட்டி, முனியாண்டிபுரம், சிவன் நகர், இந்திரா நகர், கப்பலூர் காலனி, பொம்மையாபுரம் ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட அபர்ணா, பாக்கியலட்சுமி, பாலசௌந்திரம், முனீஸ்வரி, சுசிகண்ணன், முனியம்மா, மாரியம்மா, குருவம்மா, ஜெயலட்சுமி, அமுதா, செல்லத்தாய், இசக்கிமுத்து ஆகியோருக்காகத் துதிப்போம். பால்பாண்டி, பாலமுருகன், காளிமுத்து மற்றும் நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட, அமுதாவின் கணவர் போதை பழக்கத்திலிருந்து விடுதலை பெற, ராமலட்சுமி மூளை நரம்பு நோயிலிருந்து சுகம் பெற, அன்னலட்சுமி தடைநீங்கி ஆராதனையில் கலந்து கொள்ள ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் : திரு. T.S. தங்கராஜ் – திருமதி. செல்வமணி**

நற்செய்திப்பணி செய்யப்பட்ட பாலமேடு, மேலச்சின்னம்பட்டி, கீழச்சின்னம்பட்டி சின்னஊர்சேரி, அய்யூர், தேவசேரி, எர்ரம்பட்டி, ஆதனூர், அலங்காநல்லூர் ஆகிய கிராமங்களுக்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் : திரு. ஜஸ்டின் சாமுவேல் – திருமதி. சுபா**

நற்செய்திப்பணி செய்யப்பட்ட காந்திநகர், ஜாய் கார்டன், அச்சம்பத்து, புதுக்குளம், சம்பங்கி நகர், லாலாசத்திரம், ஆனந்தி நகர், சொக்கநாதபுரம், சகாயம் நகர் ஆகிய கிராமங்களுக்காகத் துதிப்போம். செல்வம், வள்ளி ஆகியோர் இரட்சிக்கப்பட, சக்தி நகரில் மாலை நேர வகுப்புகள் ஆரம்பிக்கப்பட, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**சுயசார்புத் திருச்சபை**

**அருட்பணியாளர் : திரு. வயநாட்டுமுத்து – திருமதி. கனியமுது**

நற்செய்திப்பணி செய்யப்பட்ட வீரம்பட்டி, மாயக்குரும்பன்பட்டி, பூச்சம்பட்டி, பெருமாள் கோயில்பட்டி, சொரிக்காம்பட்டி, சமத்துவபுரம், சௌந்திரராஜபுரம், பொன்னமங்கலம் ஆகிய

கிராமங்களுக்காகத் துதிப்போம். ஜெயமேரி, கனகா ஆகியோருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க, மேரி குடலிறக்க நோயிலிருந்து சுகம் பெற, சீதாவுக்கு திருமணம் நடைபெற, ஜெஸியின் திருமணத் தேவைகள் சந்திக்கப்பட, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் : திரு. J. ஜெயகுமார் – திருமதி. கனி**

நற்செய்திப்பணி செய்யப்பட்ட மீனாட்சிபட்டி, வெள்ளப்பாறைபட்டி, தனக்கன்குளம், சகாயம் நகர், வடபழஞ்சி, சாக்கிலிப்பட்டி, பல்கலைநகர், அடைக்கம்பட்டி ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட வடிவேல், காசி, மணிகண்டன், போஸ், சதீஷ், ரஞ்சித், ஆனந்த், விக்கி, செல்வக்குமார், குமார் ஆகியோருக்காக, நற்செய்தி கேட்டு ஆராதனையில் கலந்துகொண்ட அழகுப்பிள்ளை, சூசன்னா, லட்சுமி ஆகியோருக்காகத் துதிப்போம். ஊழியரின் மனைவி கனிக்கு நிறைவான சுகம் கிடைக்க, மீனாட்சி தொண்டை கட்டி நோயிலிருந்து சுகம் பெற, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**சுயசார்புத் திருச்சபை அருட்பணியாளர் : திரு. பிலிப் முருகன் – திருமதி. அனிதா**

நற்செய்திப்பணி செய்யப்பட்ட குளத்துப்பட்டி, காலனி, வெள்ளமலைபட்டி ஆகிய கிராமங்களுக்காகத் துதிப்போம். கொடியம்மாள் குடும்பம், சந்தியா ஆகியோர் இரட்சிக்கப்பட, சந்தியாவுக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க, ராமசாமி, மாயஜோதி ஆகியோர் சுகம் பெற, குளத்துப்பட்டியில் ஜெபக்குழு உருவாக்கப்பட ஜெபிப்போம்.

**தேனி மாவட்டம்**

**அருட்பணியாளர் : திரு. P. தேவதாஸ் – திருமதி. பிலோமினா**

நற்செய்திப்பணி செய்யப்பட்ட பாலக்கோம்பை, T. அழகாபுரி, ராயவேலூர், கென்னடியூர், வண்டியூர், கரட்டுப்பட்டி, ஆவாரம்பட்டி, தெப்பம்பட்டி, கொழிஞ்சிப்பட்டி, ராமகிருஷ்ணாபுரம், இராஜக்காப்பட்டி, போத்தம்பட்டி, கீரைப்போத்தம்பட்டி ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட பொன்னுச்சாமி, முத்தையா, கண்ணதாசன், சொக்கலிங்கம், ராமர், முருகன், சுப்புராஜ், பெருமாள், ராஜாத்தி, மாயி, வேல்முருகன், பாலு ஆகியோருக்காக, புதிதாக ஆலயத்திற்கு வரும் அய்யம்மாள், முத்துலட்சுமி, சின்னச்சாமி ஆகியோருக்காகத் துதிப்போம். சக்கரையம்மாள் ஆஸ்துமா நோயிலிருந்து நிறைவான சுகம் பெற, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :திரு.G. நாதன் – திருமதி. மேகலா**

நற்செய்திப்பணி செய்யப்பட்ட பொன்னம்மாள்பட்டி, முத்துநாயக்கன்பட்டி, கண்டமனூர், தேக்கம்பட்டி, அடைக்கம்பட்டி, டி.மீனாட்சிபுரம், அன்னை இந்திரா நகர் ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட முத்துக்குமார், வணங்காமுடி, ஜான் பீட்டர், பொன்னுசாமி, மனோஜ், ராஜன், தேன்மொழி, ஜான்சி ஆகியோருக்காக, புதிதாக ஆராதனையில் கலந்துகொள்ளும் லட்சுமி, மனோகரன், காயத்ரி, ராஜு ஆகியோருக்காகத் துதிப்போம். ரெஜினா (அறுவைச் சிகிச்சை), வீரணன் (நுரையீரல்–சிறுநீரக நோய்) ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க, லட்சுமி, காயத்ரி ஆகியோருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க, மனோகரன் கடன் பிரச்சனையிலிருந்து விடுதலை பெற ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் : திரு.J. உலகநாதன்–திருமதி. சுபா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட வைகை புதூர், ஜெயமங்களம், மேல்மங்களம், பெரியகுளம், வடுகபட்டி, நாயக்கனூர் ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட ரகுபதி, ராஜேந்திரன், பிரியா, தமிழரசி, கலையரசி, சுந்தரம், கவியரசன், திவ்யா, ஜெயந்தி மாலா, ராஜன் ஆகியோருக்காகத் துதிப்போம். சரண்யா (மூளை நரம்பு நோய்), தவமணி (உடல் வலி), மகேஸ்வரி (சர்க்கரை நோய்) ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க, அந்தோணியம்மாள் குடும்பத்தில் சமாதானம் கிடைக்க, அந்தோணியம்மாளின் கணவர் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**விருதுநகர் மாவட்டம்**

**அருட்பணியாளர் : அருள்திரு.B. சாமுவேல் கணேசன் –திருமதி. விஜயா**

நற்செய்திப்பணி செய்யப்பட்ட தண்டியனேந்தல், கல்குறிச்சி, வக்கணாங்குண்டு, தோணுகால், சமத்துவபுரம் ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட செல்வராஜ், காளி, கண்ணன், சதீஷ், சிவக்குமார், மணிகண்டன், விஜி, அருண், காளியம்மாள், மாரியம்மா, குருவம்மா, பழனியம்மாள் ஆகியோருக்காக, புதிதாக ஆராதனையில் கலந்துகொண்ட செல்வி, அழகம்மா, ரஞ்சித், ஆனந்த், அகல்யா ஆகியோருக்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்டவர்கள்

இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**தென்காசி மாவட்டம்** **அருட்பணியாளர் : திரு. J. பவுல்ராஜ் – திருமதி. எமீமாள்**

நற்செய்திப்பணி செய்யப்பட்ட மருதங்கிணறு, மேலசிவகாமிபுரம், திருமலாபுரம், மகேந்திரவாடி, ஆயாள்பட்டி, சம்பங்குளம், கெச்சிலாபுரம், வடக்கு காலங்கரைப்பட்டி, கொக்குளம் வலசை, மேலநீலிதநல்லூர், மடத்துப்பட்டி, வலசை, கருப்பானூத்து ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட சித்திரைவேல், தமிழ்ராஜ், வேல்ராஜ், கிருபாகரன், மகேந்திரன், மாடத்தி, ஜப்பினியம்மாள், ராமலட்சுமி, முத்துமாரி, சுந்தர், மகாலட்சுமி, முருகன், பொன்னுசாமி, சின்னபாண்டி, மாரியப்பன், முருகேஷ்வரி, பூஜா ஆகியோருக்காக, மகாலட்சுமிக்கு குழந்தை பாக்கியம் கிடைத்ததற்காகத் துதிப்போம். முருகன், லதா கடன் பிரச்சனையிலிருந்து விடுதலை பெற, மாரியப்பன் சிறுநீரக நோயிலிருந்து சுகம் பெற, தமிழ்ராஜ் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற, சித்திரைவேல் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**தூத்துக்குடி மாவட்டம்**

**அருட்பணியாளர் : திரு. M.M. சாலமோன் – திருமதி. ஜெஸி**

நற்செய்திப்பணி செய்யப்பட்ட கீழசெக்காரக்குடி, மேலசெக்காரக்குடி, பொட்லூரணி, கொம்புக்காரநத்தம், மீனாட்சிபுரம், உமரிக்கோட்டை ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட முத்துப்பாண்டி, சரவணப்பெருமாள், ரவிச்சந்திரன், அமுதா, பேச்சியம்மாள், கடற்கரை, சண்முகம், மாடசாமி, மாரியப்பன், ராஜேந்திரன், சுடலைமாணிக்கம், வள்ளியம்மாள், பால்ராஜ் ஆகியோருக்காகத் துதிப்போம். ரவிச்சந்திரன், அமுதா, சரவணபெருமாள், முத்துப்பெருமாள் மற்றும் நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட, தாட்சாயினி, தனிஷ் ஆகியோர் எழுந்து நடக்க ஜெபிப்போம்.

**புதன்**

**விழுப்புரம் மாவட்டம்**

**அருட்பணியாளர் : திரு.D. தங்கராஜ் – திருமதி. எஸ்தர் பிரியா**

நற்செய்திப்பணி செய்யப்பட்ட கருவேப்பிலைபாளையம், மடப்பட்டு, பருகம்பட்டு, அரும்பட்டு, காந்தலவாடி, இருந்தை, மேட்டத்தூர், வீரப்பாறை ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட தேன்மொழி, தமிழ்செல்வி, சந்திரமோகன், லெட்சுமி, வெண்ணிலா, விமலாதேவி, செந்தில், சுதா, கற்பகம், சாமுண்டீஸ்வரி, மூர்த்தி ஆகியோருக்காக, புதிதாக ஆராதனையில் கலந்து கொண்ட பார்வதி, தாட்சானியா, அன்னலட்சுமி, சீலா, ரஞ்சிதா, பாரதி, தேன்மொழி ஆகியோருக்காகத் துதிப்போம். ஸ்ரீமதிக்கு சுகப்பிரசவம் கிடைக்க, சந்தியா, சஞ்சய் ஆகியோர் குடும்பமாக இரட்சிக்கப்பட, பாரதி இரத்த அழுத்த நோயிலிருந்து சுகம் பெற, மூர்த்தி குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**தரிசனம் பரப்புவோர்**

புதிய தாங்குவோர் கிடைக்க, புதிய ஜெபக்குழுக்கள் ஆரம்பிக்கப்பட, திரு.R.பாலசுப்பிரமணியன் (தென் மண்டல ஒருங்கிணைப்பாளர்),திரு.T. விஜயசங்கர் (வடமண்டல ஒருங்கிணைப்பாளர்), அருள்திரு. பீட்டர் (ஜெப ஒருங்கிணைப்பாளர்), ஊழியர்கள்: திருமதி. ஹெர்சி லீதியாள் மாசில்லாமணி, திருமதி.C. மேபல்ராணி, திரு.S. ரிவிங்டன் ஜெபராஜ், திருமதி. இந்திராணி கில்பர்ட், திருமதி. தீபா மோசஸ், திருமதி.J. பிளஸ்ஸி, திருமதி. ராணி வின்செண்ட், திரு.K. பால்ராஜ், திரு.S. சம்பத்குமார், திரு.S. டேவிட் சாலமோன், திரு. தொங்கன் லம் ஜோ, திரு.A. தம்புராஜ், திரு.P. மரியானந்தன் மாற்கு, திருமதி.T. சுசீலா, திரு.F. ஹென்றி ஜார்ஜ், திருமதி.A. சம்மனசு மேரி, திரு.A. ஜோசப் ஆசீர்வாதம், திரு.A. மகுடீஸ்வரன், திரு.J.P. ரவிக்குமார், திருமதி. பியூலா திருவாசகி, திருமதி. ஜான்சி டயானா, திரு.S. கிருஷ்ணமூர்த்தி, திருமதி.V. சுவேகா, திரு.ஞானசேகரன் ஆகியோரின் பயணப் பாதுகாவலுக்காக, குடும்பங்களுக்காக, இருசக்கர வாகன விபத்தில் பாதிக்கப்பட்டு சுகமாகி வரும் திரு. சம்பத்திற்கு நிறைவான சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

**பதிவு அலுவலகம்**

அருள்திரு.V. இம்மானுவேல் பாண்டி (தென்மண்டலப் பணித்தள ஒருங்கிணைப்பாளர்), திரு.C. ராஜரத்தினம் (சொத்து பராமரிப்பாளர்), திரு. தாங் பாவ் ஹோகிப் (வடஇந்தியப் பணித்தள ஒருங்கிணைப்பாளர்), திரு.தினகரன்(சத்தீஷ்கர் பணித்தள ஒருங்கிணைப்பாளர்) ஆகியோருக்காக ஜெபிப்போம்.

## மொழிபெயர்ப்புப் பணி

மொழி பெயர்ப்பாளர் திருமதி. ஷீலா நாகராஜனுக்குத் தேவையான ஞானம் கிடைக்க, மொழி

பெயர்ப்பு உதவியாளர் திரு.சுக்மன் மாத்லாமுக்காக, நடைபெற்றுவரும் பழைய ஏற்பாட்டு மொழி பெயர்ப்புக்கு உதவி செய்யும் திரு.கசியா மாத்லாம், செல்வி.மங்கள்தாய் ஆகியோருக்காக, யாத்திராகமம் மற்றும் சங்கீதம் ஆகிய மொழி பெயர்ப்புப்பணிகள் நல்லமுறையில் நடைபெற, கோண்டி மொழி ஆடியோ வேதாகமம் தேவையான கோண்டி மக்களுக்கு விரைவில் கிடைக்க ஜெபிப்போம்.

**நிர்வாக அலுவலகம்**

நம் இயக்கத்தை நடத்த தேவையான ஞானம், பெலன், வழிநடத்துதல் மற்றும் பொதுச்சேவகரின் பிரயாணங்களுக்காக, பொதுச்சேவகர் அருள்திரு.அ.லெஸ்லி நாகராஜன், அருள்திரு.வெ. ஜான், அருள்திரு.G. பொன்னுராஜ், திரு.A. சாம் டென்சிங், திரு.A. ஆஷிஸ், திரு.Y. பிரான்சிஸ் ராஜா, திரு.S. ஞானசேகர், திரு.A. பிரபாகரன், திருமதி. ஜான்ஸி ஜெய கிருபா, திரு.சைமன் ஆகியோருக்காக ஜெபிப்போம்.

**வளரும் விண்ணரசு**

இதழை வாசிக்கிறவர்களுக்கு பயனுள்ளதாகவும், எழுதுபவர்கள் தூய ஆவியானவரால் ஆளுகை செய்யப்படவும், புதிய புத்தகங்கள் அச்சிடப்படவும், ஆசிரியர் குழுவினரின் உழைப்பு மற்றும் குடும்ப நலனுக்காகவும் ஜெபிப்போம்.

**நிர்வாகம்**

நிறுவனர் **Dr.N.J.** ஞானையா, செயற்குழு உறுப்பினர்கள் **Dr.S.** அருண், திரு.**J.** எபிநேசர் மார்டின், திரு.**K.** ஜான்சன், திரு.**P.** கோபாலகிருஷ்ணன், திரு. ஜோஷிராஜ்பால், திரு.**J.E.** பால் ஆபிரகாம், திரு. வெஸ்லி ஜோயல் மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள் ஆகியோரது குடும்பங்களுக்காக ஜெபிப்போம்.

**இறையியல் கல்வி**

இறையியல் கல்வி பயிலும் 26 பேருக்காக துதிப்போம். அஸ்வந்தி கச்லாம், பத்ரு சலாம், பஜாரி சலாம், திபேஷ் சலாம், ஜுகேஷ் துக்கா, கோதாய் துக்கா, லலிதா கருங்கா, லால்துராம் சலாம், ரஜனி சலாம், ராம்தாய் குமெட்டி, ரமேஷ் வாடே, ராம்நாத் வாடே, ரெபேக்கா சலாம், சன்பதி காவ்டே, சவிதா நுரெட்டி, சொனாரு கோரம், சுக்தேவ் குமெட்டி, சுக்ராம் சலாம், சுக்யாரின் மண்டாவி, சுனிதா வாடே, சுரேந்திரா காவ்டே, உபேஷ் சலாம், சத்தியசீலன், ரெஜினா மேரி, பிரின்ஸ் ராய்சன், ரேணுகா ஆகியோர் சிறப்பான முறையில் இறையியல் கல்வி கற்றுத் தேற ஜெபிப்போம்.

## உப்பிலியபுரம் ஆலய பிரதிஷ்டை.

திருச்சி மாவட்டத்திலுள்ள உப்பிலியபுரம் கிராமத்தில், 2010ஆம் ஆண்டு அருட்பணியாளர் திரு.ஜெயக்குமார் குடும்பம் மூலமாக இங்கு ஊழியம் ஆரம்பிக்கப்பட்டது. தொடர்ந்து செய்யப்பட்ட அருட்பணியின் விளைவாக 60 பேர் கொண்ட ஆராதனைக் குழு இங்கு ஏற்படுத்தப்பட்டது. அதன்பின் ஆலய விசுவாசி ஒருவர் இங்கு ஆலயம் கட்டுவதற்காக தன்னுடைய இடத்தைக் கொடுத்தார். அநேகருடைய ஜெபத்தினால், 2022ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இங்கு ஆலயக்கட்டுமானப்பணி ஆரம்பிக்கப்பட்டது.

பலருடைய உதாரத்துவமான காணிக்கைகளினால் வளர்ந்துவந்த இவ்வாலயக்கட்டுமானப்பணி 2024 மார்ச் மாதம் நிறைவு பெற்றது. அதே மாதத்தில் 21ஆம் தேதியன்று ஆலயம், கர்த்தருடைய நாம மகிமைக்காக அர்ப்பணிப்பு செய்யப்பட்டது. இந்த ஆலயம் கட்டப்பட ஜெபித்த, கொடுத்த ஒவ்வொரு தேவ பிள்ளைகளுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். தேவன்தாமே அவர்களை ஆசீர்வதிப்பாராக. இந்த ஆலயம் மூலமாக, அநேக ஊழியர்கள் எழும்பவும், ஊழியர்கள் தாங்கப்படவும் மற்றும் சுயசார்பு திருச்சபையாக மாறவும் ஜெபியுங்கள் நன்றி.

## வட இந்தியா

**அருட்பணியாளர்: திரு. தினகரன் -லீனா குமாரி கிரேஸ்**

மட்டாவாண்ட், ஓங்நார், திம்நார், சிப்ரேல், ஆம்காவ் ஆகிய கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட்டதற்காகத் துதிப்போம். மனோத்தி பொட்டாய் இருதய நோயிலிருந்து சுகம் பெற, கசியா பொட்டாய்க்கு விரைவில் திருமணம் நடைபெற, கடுவா பொட்டாய்–சுக்காய் பொட்டாய் தம்பதியினருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க, அரசு தேர்வு எழுதும் விடுதி மாணவர்களுக்காக ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. ராம்பொரஸ் போயாம் -சங்கீதா**

கொங்கேரா, பேசிமட்டா, பூஸ்வஹி ஆகிய கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட்டதற்காக, ரமேஷ் கொர்ரம் நற்செய்தி கேட்டதற்காகத் துதிப்போம். மான்சு, தஸ்ரத், சுத்ராம் ஆகியோர் இரட்சிக்கப்பட, சுந்தர் கச்லாம் தலைக்காயத்திலிருந்து சுகம் பெற, ராம்தேர்–மனேக் தம்பதியினருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. சந்து சலாம்–சன்பத்தி**

ஜமீடு, காராவண்ட், குருசுநார், கோட்டா ஜமீடு, கரேல் ஆகிய கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட்டதற்காக, சுக்தேர், சந்தேர் ஆகியோர் நற்செய்திக்கு ஆர்வம் காட்டுவதற்காக, குரூஸ்நாரில் ஆராதனை நடைபெறுவதற்காக, உபவாசம், பெண்கள் ஐக்கியம், ஆண்கள் ஐக்கியம், வாலிபர் ஐக்கியம், சிறுவர்கள் ஊழியம் ஆகியவை நடைபெறுவதற்காக, சிறுமி அக்கிசதா வயிற்று வலியிலிருந்து சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். சோன்தேருக்கு ஏற்ற வாழ்க்கைத் துணை கிடைக்க, குரூஸ்நார் விசுவாசிகளிடையே ஒற்றுமை காணப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. மங்கலு மாத்லாம் – சுசீலா**

பாட்பால், ஷியாநார், பூசுவால் ஆகிய கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட்டதற்காக, ஷியாநார், பாட்பால் ஆகிய இடங்களில் ஜெபக்குழுக்கள் நடைபெறுவதற்காக, மாலி, சந்தன், தஸாய், பூல்மதி, ஜய்மதி, சுதாய், மாலி ஆகியோர் சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். சன்வாரி (இருதய வலி), பூல்னா, சௌக்கோ, ஜய்மதி துள்சி ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. கஸியா துக்கா–ருப்பாய்**

மிசீர், போங்காபால்,ஆமசாரா, ஜாக்கீர், அல்மேர், ஆதுவார், கொகடா ஆகிய கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கவுள்ள தடை நீங்க, ஜாக்ரி, அமாஜாரா ஆகிய இடங்களில் ஆராதனைகள் விரைவில் ஆரம்பிக்கப்பட, சத்தாய் சலாம் (மூல நோய்), தல்ஸாய் வட்டே (வயிற்று வலி), லஜோத்தி நேதாம் (தொண்டை வலி) ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க, ரூப்பாய் துக்காவிற்கு சுகப்பிரசவம் கிடைக்க ஜெபிப்போம்.

**வியாழன்**

**அருட்பணியாளர்: திரு. சாது துக்கா – ரசாய்**

ஆம்காவ், மோலோல்நார்,மஸ்பூர் ஆகிய கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட்டதற்காக, மஸ்பூர், சிப்ரேள் ஆகிய இடங்களில் ஆராதனைகள் நடைபெறுவதற்காக,சிப்ரேளில் 13பேர் திருமுழுக்கு பெற்றதற்காகத் துதிப்போம். சோனி கருங்கா (வலிப்பு நோய்), ஜய்மதி துக்கா (சரீர வலி), சரணி (இடுப்பு வலி) ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க, ராம்பதி பொட்டாய், சோனி கருங்கா ஆகியோர் விசுவாசத்தில் வளர ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. புத்சிங் வட்டே–ரெய்னி**

மட்டாவண்ட், ஆடேம்பால், ஓங்நார், மாத்லா ஆகிய கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட்டதற்காக, உபவாச ஜெபம், வாலிபர் கூடுகை, வீட்டுக்கூட்டம் ஆகியவை நடைபெற்றதற்காக, ஏதேவ்பால், மாத்லா ஆகிய இடங்களில் ஆராதனைக்குழுக்கள் நடைபெறுவதற்காகத் துதிப்போம். விபத்தினால் பாதிக்கப்பட்ட சிர்சுவுக்கு சுகம் கிடைக்க, அறுவைச் சிகிச்சை செய்யப்பட்ட சின்சாய் பொட்டாய்க்கு நிறைவான சுகம் கிடைக்க, ரமேஷ் பொட்டாய், மங்கள் பொட்டாய் ஆகிய குடும்பத்தினரிடையே சமாதானம் நிலவ, மனோத்தி நெஞ்சு வலியிலிருந்து சுகம் பெற ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு.மான்சிங் கச்லாம் – சுல்மதி**

கொங்குலா, ஜாரா, மலேசூர், மண்டம்நார், கோந்தாகூங் ஆகிய கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட்டதற்காக, ஜாராவில் ஜெபக்குழு நடைபெறுவதற்காகத் துதிப்போம். சோனாரு கச்லாம் சிறுநீரகக்கல், மஞ்சள் காமாலை, இரத்தக்குறைவு, வயிற்று வலி ஆகிய நோய்களிலிருந்து நிறைவான சுகம் பெற, மட்மனார், கோந்தாகூர் ஆகிய இடங்களில் மீண்டும் ஆராதனை நடைபெற ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. ஜ ஃகுல் சலாம் – சொனாரி**

சிர்பூர், மாத்லா, பாகுபேடா, கீதும் பேடா, சொனாபால், நைத்தாநார், சாந்தகாவ் ஆகிய கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட்டதற்காக, ராம்சாய் பொட்டாய், சூகாதா பொட்டாய், ராம்சிங் பொட்டாய் ஆகியோர் நற்செய்திக்கு ஆர்வம் காட்டுவதற்காக, பாக்பேடா, சோனாபால், சிர்பூர் ஆகிய இடங்களில் ஜெபக்குழுக்கள் நடைபெறுவதற்காகத் துதிப்போம். டூரட், கலேபால், கீதும் பேட ஆகிய இடங்களில் நற்செய்தி அறிவிக்க காணப்படும் எதிர்ப்புகள் மறைய, பானா விசுவாசத்தில் வளர, பல்தேர் வட்டே, சந்தேர் சலாம் ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க,ராம்நாத் பொட்டாய்க்கு விரைவில் திருமணம் நடைபெற ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. தஸ்ரு பொட்டாய்–ஜெய்மதி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பாவாடி, கோட்லி, மலேபூர் ஆகிய கிராமங்களுக்காக, மோட்டே சலாம் நற்செய்தியை ஆர்வமாக கேட்டதற்காக, கோட்லி, பாவ்டி ஆகிய இடங்களில் ஜெபக்குழுக்கள் நடைபெறுவதற்காக, மால்மதிக்கு அறுவைச் சிகிச்சை நடைபெற்றதற்காகத் துதிப்போம். சன்பத்தி கச்லாம், சுமித்ரா ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க, ஸமி விசுவாசத்தில் வளர, ராம்தேர், மண்டாவி, ராஜ்நத் சக்லாம், சங்கர் பொட்டாய், பால்சிங் கச்லாம், சனேர்வா பொட்டாய் ஆகியோர் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: செல்வி. கசினி துக்கா**

பல்லோடா,மொடேங்கா,போடாவண்ட்,பால்டா, இங்நார் ஆகிய கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட்டதற்காக, பல்னாவில் ஜெபக்குழு நடைபெறுவதற்காக, ராம்சிங் சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். தனானாய் நிறைவான சுகம் பெற, பூல்தாய் விசுவாசத்தில் வளர, மங்கல்ராம், பூல்சிங், சோனாவூ ஆகியோர் இரட்சிக்கப்பட, வதோ பயத்தின் ஆவியிலிருந்து விடுதலை பெற ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு.தேசிராம் வட்டே–ரானோ**

காராவாண்ட், நாவூபூஜ்மேடா, சிவ்னி, திம்நார் ஆகிய கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட்டதற்காக, ஸ்ரீமதி, ராஜ்வதி, ஆதிராம் வட்டே ஆகியோர் நற்செய்திக்கு ஆர்வம் காட்டுவதற்காக, ஷியாநார், பாட்பால், ஆகிய இடங்களில் ஜெபக்குபக்கள் நடைபெறுவதற்காகத் துதிப்போம். பல்லிராம் மண்டாவி (மூல நோய்), ரெய்மதி (கை கால் வலி), சீத்தே வட்டே (தொண்டை வலி) ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. ஜக்நாத்குமிட்டி– சுக்கோ குமிட்டி**

தாடூர், பரல்பாட், புடுகாபேடா, பரண்டா, ஜீல்பரஸ், கேராபாட் ஆகிய கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட்டதற்காக, தாட்கூர், பிடுகாபேடா, ஜில்பிரஸ், கேராபாட், போக்ராபேடா ஆகிய இடங்களில் ஜெபக்குழுக்கள் நடைபெறுவதற்காக, சகாராம் பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற்றதற்காக, சோகன் கொர்ரம் மனநோயிலிருந்து சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். நிரங்கு நுரேட்டி (கை கால் வலி), சுகனி (தலை வலி) ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க, புகோந்தி துக்கா, ராம்ஸாய் துக்கா ஆகியோர் விசுவாசத்தில் நிலைத்து நிற்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு.லட்சு கருங்கா–புல்தாய்**

போட்பால், கடக்காகாவ், கொர்ரா, மாசின்பாரா, சீண்டுபாரா, ஜட்டப்பாரா ஆகிய கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட்டதற்காகத் துதிப்போம். மங்கல்சிங் விசுவாசத்தில் வளர, விசுவாசிகள் மற்றும் ஊழியர் மீது போடப்பட்டுள்ள வழக்குகளிலிருந்து அவர்கள் விடுவிக்கப்பட, தயாராம் புற்று நோயிலிருந்து சுகம் பெற ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. சன்னு துக்கா–மனிஷா துக்கா**

மரக்கபேடா, காபிஸ், பிஞ்சிலி, முன்ஞ்மேடா ஆகிய கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட்டதற்காக, உபவாச ஜெபம், நாராயண்பூர் விடுதியில் ஆராதனை நடைபெறுவதற்காகத் துதிப்போம். மனைவியை இழந்த துக்காரு வட்டே மற்றும் அவரது இரண்டு பெண் குழந்தைகளுக்கு தேவன் ஆறுதல் தர, ரஜாய்க்கு நிறைவான சுகம் கிடைக்க, மரக்கபேடா

திருச்சபை வளர ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. சுக்மன் பொட்டாய்– சுக்மி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட படுகாபேடா, பரணடா, பரஸ்காவ், மொர்ஸ்கோடா, வேத்மாகோட் ஆகிய கிராமங்களுக்காக, ராம்கமார் குமிட்டி நற்செய்திக்கு ஆர்வம் காட்டுவதற்காக, புத்னிபாய் நெஞ்சுவலியிலிருந்து சுகம் பெற்றதற்காகத் துதிப்போம், அசோக் துக்கா, சோமாரு துக்கா, சோமா ராம் குமிட்டி ஆகியோர் இரட்சிக்கப்பட, துபேஷ் மனைவிக்கு சுகப்பிரசவம் கிடைக்க, முகேசுக்கு ஏற்ற வாழ்க்கை துணை கிடைக்க, ராணோ, தனிராம், தேவாந்தி ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: செல்வி. கோத்தாய் பொட்டாய்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பரஸ்காவ், மொர்ஸ்கோடா, மண்டோகி ஆகிய கிராமங்களுக்காக, உபவாச ஜெபம், சிறுவர் ஊழியம் ஆகியவை நடைபெற்றதற்காக, மொரோஸகோடாவில் ஜெபக்குழு நடைபெறுவதற்காக, ரூப்ஜிக்கு நிறைவான சுகம் கிடைத்ததற்காகத் துதிப்போம். பாண்டு எழுந்து நடக்க, ராய்மதி நெஞ்சு வலியிலிருந்து நிறைவான சுகம் பெற ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. பஜ்நாத் சலாம்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சாந்தி நகர், குட்ராபாரா, பாத்ரு டன்ட்பாரா, பொக்கு பாரா, கரன்சி பாரா, பால்கி, ரேமாவாண்ட் ஆகிய கிராமங்களுக்காக, ரேமாவாண்ட், பாத்ரு டண்ட் ஆகிய இடங்களில் ஜெபக்குழுக்கள் நடைபெறுவதற்காக, மங்கலு, ரானோ, சந்த்லால் ஆகியோர் திருமுழுக்கு பெற்றதற்காக, சந்தலால்–சங்கீதா ஆகியோருக்கு திருமணம் நடைபெற்றதற்காக, சுமித்ரா, இஸா, ரனோத்தி ஆகியோருக்கு சுகப்பிரசவம் கிடைத்ததற்காகத் துதிப்போம். ஷ்யாம்லால் குடும்பம் இரட்சிக்கப்பட, மான்கு குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற, பத்ரு, சர்க்கரை மற்றும் மனநோயிலிருந்து சுகம் பெற ஜெபிப்போம்

**வெள்ளி**

**அருட்பணியாளர்: திருமதி. மணிஷா துக்கா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட குமாரபாரா, நாராயண்பூர், குட்ரபாரா ஆகிய பகுதிகளுக்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்

**அருட்பணியாளர்: திருமதி. தன்பத்தி பொட்டாய்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட நயாநார், ரேமாவாண்ட், மாலிங்நார் ஆகிய பகுதிகளுக்காக, போர்தே நற்செய்திக்கு ஆர்வம் காட்டுவதற்காகத் துதிப்போம். நாயநார், ரேமாவாண்ட், மாலிங்நார் ஆகிய இடங்களில் மீண்டும் ஆராதனைகள் ஆரம்பிக்கப்பட, ராம் விசுவாசத்தில் வளர ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. சொகாய் கருங்கா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கோட்காவ், தேவ்கான், கோகதா ஆகிய பகுதிகளுக்காக, சஞ்சீத் குமார் நற்செய்திக்கு ஆர்வம் காட்டுவதற்காக, அருணுக்கு கண் அறுவைச் சிகிச்சை நல்லமுறையில் நடைபெற்றதற்காக, சோம்நாத் வயிற்று வலியிலிருந்து சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். ஷியாபதி (உடல் வலி, தலை வலி),தஸ்ரி (முதுகு வலி), ஜெகநாத் ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: செல்வி. ரெய்னி வட்டே**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட மட்டாவாண்ட், நாராயண்பூர், ஓங்நார் ஆகிய பகுதிகளுக்காக, சத்யம் சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். ரமேஷ் பொட்டாய், ரைசிங், ராம்லால், ராம்பதி, லட்சுமி ஆகியோர் இரட்சிக்கப்பட, சௌமியா, ஆதித் ஆகியோர் கிறிஸ்துவில் வளர ஜெபிப்போம்.

**ஜார்கண்ட் மாநிலம்**

**அருட்பணியாளர்: திரு. குந்தர் பகெல் — திருமதி. மம்தா பகெல்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட டாடாபாணி, லில்லா பாதல், பாண்ட்ரியா, மாகு வாட்டிக்கர், டோலா, காஜிரி, நாக்ரா, பூத்தடோலா, ராமானுகஞ்ச், முங்கை, பல்ராம்பூர், துரித், ராஞ்சி, குட்டு, பஸிந்த்பூர் ஆகிய பகுதிகளுக்காக, டோப்போ இயேசுவை ஏற்றுக் கொண்டதற்காகத் துதிப்போம். அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ள சோனி நிறைவான சுகம் பெற, அம்ரித்தா, சரிதா ஆகியோருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க ஜெபிப்போம்.

**திரு. மங்கள் மராண்டி – திருமதி. சுகாஜினி சௌரேன்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட லாப்தா, கரங்காடி, லிட்டிபாரா, ஜாகேஷ்வர் ஆகிய

பகுதிகளுக்காக, கெம்ரோம் வயிற்று வலியிலிருந்து சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். கலஹாசோர், சூத்ரோ, ஜோங்கோ, நவாடிக் ஆகிய கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட ஜெபிப்போம்.

**ஒடிசா**

**அருட்பணியாளர்:திரு. டேனியல் சாந்தா - திருமதி. புலிமி சாந்தா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட குமுடாகுடா, பாலிஜொடிபொதொர், ஒச்சன்குடா ஆகிய இடங்களுக்காக, கோமித், லாபோ, ஜோய்ரம்ப், கோபி ஆகியோருக்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டதற்காகத் துதிப்போம். கோபி, சோபனா குமுளு ஆகியோர் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. அப்பொல் மண்டல் – திருமதி. சுமித்ரா மண்டல்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட குபுடாடிகி, தொட்ரபாரா, குட்டுஹா, ஜெலி டொங்குரி, பாமனி, ஹண்டி கொத்ரா, பரசுண்டி, ரேகவத்தி ஆகிய பகுதிகளுக்காக, நற்செய்தி கேட்ட மோகன், உஷா, பூர்ணா, சித்வான், கீதா, அஜ்னா, சுரேந்திரா, சான்பா ராணி, ராகுல், ஆர்த்தி, சுபத்ரா, கும்டி கீதா, ஜெய்லால், ஜகன்னாத், சைதி பூமி ஆகியோருக்காக, பிங்கி சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். தொட்டபாராவில் ஆராதனைக்கூடம் அமைக்கப்பட, துமிரி விசுவாசிகள் கிறிஸ்துவில் வளர ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. சுசாந்த் குல்தீப்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட ஜாம்தொரா, பெஹடா, உம்மர்கோட், மால்பேடா, பணிப்பொதொர் ஆகிய பகுதிகளுக்காக, புதிதாக நற்செய்தி அறிவிக்கப்பட்ட சந்தன் ஹரிஜன், ராஜ்குமார் ஹரிஜன், சந்திரிகா, ரஞ்சிதா, குப்தா, மஞ்சுளா பிரிதம், சுகுமாரி ஆகியோருக்காகத் துதிப்போம். ஜாம்தொரா, பதோதரா ஆகிய இடங்களில் நற்செய்தி அறிவிக்க திறந்த வாசல் கிடைக்க, தேவேந்திர ஹரிஜன், சந்தன் ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திருமதி. ஜானகி மாஜி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பெல்ஹாமுக்காக, புதிதாக நற்செய்தி அறிவிக்கப்பட்ட ராஜ்மொனி, கேத்ரா, மினகேட்டனா, சிரபானி ஆகியோருக்காக, போல்கிக் வயிற்று வலியிலிருந்து சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். 3 வயதான போட்மென் விரைவில் நடக்க, தெபாகி பக்கவாதத்திலிருந்து சுகம் பெற, மினகெட்டனா கால் வலியிலிருந்து சுகம் பெற ஜெபிப்போம்.

**உத்தரப்பிரதேசம்**

**(அவாதி, மிஸ்ரா, ராஜ்புத், கௌதம், தாக்கூர், சௌகான், சௌத்ரி-ஆகிய மக்கள் கூட்டத்தினர் )**

**அருட்பணியாளர்: திரு. ராம்ஜியவான் - திருமதி. ராஜ்லட்சுமி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பிஸ்வா, இஸ்பாபூர், மதன்பூர், மெய்பத்பூர், சரெய்யா, ஜான்பூர், பக்கரியா, மூரத்பூர், குவாரி, ஜம்பா, ஜான்பூர், ஹைபத்பூர், அன்னிபூர், கஜினிபூர் ஆகிய பகுதிகளுக்காக, மஞ்சு—வினோத் தம்பதியினருக்கு ஆண் குழந்தை கிடைத்ததற்காக, சுஜிலா பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற்றதற்காக, ரேணு சிறுநீரகக்கல் நோயிலிருந்து சுகம் பெற்றதற்காக, காணாமல் போன சித்தார்த் மீண்டும் வீடு திரும்பியதற்காக, பூனம் முடக்குவாதத்திலிருந்து சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். பப்பு கிறிஸ்துவில் வளர, ஜிதேந்தர் மூளைக்கட்டி நோயிலிருந்து சுகம் பெற, பூல்மதி சுவாச நோயிலிருந்து சுகம் பெற, ரேகாவிற்கு குழந்தை பாக்கியம் கிடைக்க, மனோஜிக்கு ஏற்ற வாழ்க்கைத் துணை கிடைக்க, சரோஜ், ரூபா ஆகியோர் பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. மிதிலேஷ்குமார் - திருமதி. சுனித்தா தேவி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பக்கரியாஹர், மூடா, சுத்தரி, குஸ்ஸல்ஹா, லங்கடிபூர், பீமாபூர், கோபாலபூர், கோலா, பர்தான், ஹஸரிய்யா, பதாபூர்வா, ஹரிய்யா, சூர்ஜிபூர்வா ஆகிய பகுதிகளுக்காக, பிராதாப் மனநோயிலிருந்து சுகம் பெற்றதற்காக, மங்லால் வலிப்பு நோயிலிருந்து சுகம் பெற்றதற்காக, முனீஸ்குமார் இயேசுவை ஏற்றுக் கொண்டதற்காகத் துதிப்போம். கிரண்தேவி கர்ப்பப்பை நோயிலிருந்து சுகம் பெற, ரமேஷ், அப்தேஸ், ஜகமோகன், ராம்திலால் ஆகியோர் மீது போடப்பட்டுள்ள பொய் வழக்கிலிருந்து அவர்கள் விரைவில் விடுதலை செய்யப்பட, திருமணமாகி 10 வருடமான ஜனார்த்தனன்—ஆர்த்தி தம்பதியினருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. ஓமெந்திராகுமார் – திருமதி. சவீத்தா குமாரி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட அல்மாபூர், கேம்பூர், கோலோ, கட்கா, கோகுலா, ராய்கஞ்ச், அல்மாபூர், தத்வல், பல்தேவ்பூர், குவர்பூர், பவனியாபூர், கதி, ரதுராஜ்பூர், ஸனாயி ஆகிய பகுதிகளுக்காக, ராஜேந்திரன், ரீத்தா ஆகியோருக்கு கிடைத்த சுகத்திற்காகத் துதிப்போம். காண்டோ புற்று நோயிலிருந்து நிறைவான சுகம் பெற, ஆஸிஸ் ஒவ்வாமை நோயிலிருந்து சுகம் பெற, ரோனக் விபத்துக் காயங்களிலிருந்து சுகம் பெற ஜெபிப்போம்.

**ஆந்திரா மாநிலம் (தென்னிந்தியா)**

**சனி**

**அருட்பணியாளர்: திரு. வெங்கடேஸ்வரலு – திருமதி. கடம் புஷ்பம் குமாரி,**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கனூரு, நாயுடுபேட்டை, மேனாகரு, பெரிமிடி, பூபையா காலனி, சென்னரெட்டி, கன்ரிகா ஆகிய பகுதிகளுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட ஜனார்த்தன், செங்கய்யா, மணி, சுவர்ணா, நாகராஜ் ஆகியோருக்காக, அனுவுக்கு பெண் குழந்தை கிடைத்ததற்காகத் துதிப்போம். மனேம்மா குடும்பத்தில் சமாதானம் கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு.M. பால் வீரமணி - திருமதி. பெல்சியா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கானூரு, பூபையா காலனி, சென்னா ரெட்டி காலனி, அக்கரைபேட்டா ஆகிய பகுதிகளுக்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. மது சுதாகர்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பெரிமிடி, கொத்தசெருவா, பொல்லாவரிபாலம் ஆகிய பகுதிகளுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட வெங்கடேஷ், செஞ்சு கிருஷ்ணய்யா, வெங்கசுவாமி, ஜம்மாலா ராரேந்திரா, ஆரிகண்டி கல்பனா ஆகியோருக்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. உதய்குமார்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சிரமிகா நகர், ஹரநாதபுரம் ஆகிய பகுதிகளுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட நந்தா, விஜய்ராஜ், ஹரி, ஸ்ரீனு, பிரபாகர், லஷ்மி பிரசன்னா, பூஜிதா, லிங்கேஷ் ஆகியோருக்காகத் துதிப்போம். ஊழியரின் மாமியாருக்கு நிறைவான சுகம் கிடைக்க, ஊழியம் செய்ய ஸ்ரேஞ்சர் கிடைக்க, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**கர்நாடக மாநிலம் - தேவனஹள்ளி(தென்னிந்தியா)**

**அருட்பணியாளர்: திரு. சாமுவேல் பிரபாகர்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட தேவனஹள்ளி, வெங்கடபூர், சாந்தி நகர், சோலதாவனஹள்ளி, ராஜீவ் நகர், தரபனஹள்ளி, ஹரஹள்ளி, குரபாராகுடி, எல்லையூர், சிக்கதமங்களா ஆகிய பகுதிகளுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட பாரதி, நாகேஷ், ரோசா ஆகியோருக்காகத் துதிப்போம். ஊழியரின் பிள்ளைகள் பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**குக்கி அருட்பணியாளர்கள் (வடகிழக்கு மாநிலங்கள்)**

**அருட்பணியாளர்: திரு. ஹோலன்லால் கிப்ஜென் (அருணாச்சல பிரதேசம்)**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட நியூ மேகலியங், சிவாஜி நகர், ஜெலக் பாரி, பயஹாம், தங்லத், சிவாஜி நகர், சைடியாங் ஆகிய பகுதிகளுக்காகத் துதிப்போம். அனாமி தவ்சிக் பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற, ஜான்சன் தவ்சிக் தடைநீங்கி திருமுழுக்கு எடுக்க, கலிலி கிரங் சர்க்கரை நோய், மூட்டு வலி ஆகியவற்றிலிருந்து சுகம் பெற ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. நபின் நர்ஜினரி (அருணாச்சல பிரதேசம்)**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கோரலியங், மேகலியங், லோஹித்பூர், லாசாபானி ஆகிய பகுதிகளுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட தெரிசிலு தயங்க், ஜெரி லிம்பு, எல்.பி.லிம்பு, சோம்பகதூர் லிம்பு ஆகியோருக்காக, ஒணம் சைத்தும் திருமுழுக்கு பெற்றதற்காகத் துதிப்போம். தெரிசிலு தயங்க் தடையின்றி திருமுழுக்கு எடுக்க, ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. லென்ஹோ ஹோகிப் (திரிபுரா)**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட டான்சோரா, கமலசோரா, வார்ம்லி சோரா, ஷிப்காவ் ஆகிய பகுதிகளுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட போரபாரி, குஜார் மோல்சம், புடுல் குமார், அர்சின் மோல்சம் ஆகியோருக்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. செய்ஹோலன் கிதே (திரிபுரா)**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட தான்சோரா, எம்புருட்சிரா, சாவிக்காவ், கெர்கத்தா, குவஹாத்தி ஆகிய பகுதிகளுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட சோபாத் மோல்சம், காபிரியேல் மோல்சம் ஆகியோருக்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. சத்ய பாஸி மோல்சாம் (திரிபுரா)**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கமலசேரா, ஷிப்பாரி ஆகிய பகுதிகளுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட ஹிரன், சம் நெய்லன்ஹலாம், கமோல் ஹலாம், கிரன் தெப்பர்மா, ரேணு தெப்பர்மா, காக் சங் தெப்பர்மா, அக்சய் ஹலம், ஜுடிலா மோல்சம், ராஜாமணி தெப்பர்மா, பலகுண்டி தெப்பர்மா, புலு தெப்பர்மா ஆகியோருக்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. ஸ்டீபன் லுங்ஹோகின் (சிக்கிம்)**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட ஷோம், பேஹா, கேபாங்க், நேபாளி, புகி பின்டாங்க், உத்ரய், சங்கு, ஹி காவ் ஆகிய பகுதிகளுக்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்ட மாணவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. ஹேம்கோசொன் ஹோகிப் (அருணாச்சல பிரதேசம்)**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பயா, ஹடிடுபா, யாய்லிங், கெப்ருலியாங், ஜெகோ ஆகிய பகுதிகளுக்காக, அச்சுட் சிபா நற்செய்தியை ஆர்வமாக கேட்டதற்காகத் துதிப்போம். போதைக்கு அடிமையானவர்கள் விடுதலை பெற, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. தங்காலுன் கிப்ஜென் (அஸ்ஸாம்)**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட அமராஞ்சன், எக்ரானி, ஷுகஞ்சன் ஆகிய பகுதிகளுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட தென்லன் குடும்பம், இங்கைனு ஆகியோருக்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. செய்மின்தாங் கிப்ஜென் (மணிப்பூர்)**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட தாபோர், மாவோஜிங், அராகோ, மோஹிங், பாங்மோல், மோட்பங், சிபிஜங், காங்போகிப் மருத்துவமனை, கீதெல்மண்பி ஆகிய பகுதிகளுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட லெட்செய், சினியோ, போய்மங், ஹெலுன், ஹோப் ஆகியோருக்காக, உபவாச ஜெபம், குடும்பக்கூட்டம் ஆகியவை நடைபெற்றதற்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. ஆபிரகாம் தௌதங் (மேற்கு வங்கம்)**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கேதேம்தலா, கலபாரி, தெபிடங்கா, மிலன், சில்வர்டேல் ஆகிய பகுதிகளுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட நேபாளி, தாடவ் ஆகியோருக்காக, உபவாச ஜெபம், குடும்பக்கூட்டம் ஆகியவை நடைபெற்றதற்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. லிங்ஜெனைகிம் ஹோகிப் (அருணாச்சல பிரதேசம்)**


நற்செய்தி அறிவிக்கப்பட்ட சிவாஜி நகருக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட சிச்சு, ஸ்நேயா ஆகியோருக்காக, உபவாச ஜெபம், குடும்பக்கூட்டம் ஆகியவை நடைபெற்றதற்காகத் துதிப்போம். மாணவர் விடுதிக்குத் தேவையான நூலகம், பணியாளர் விடுதி, தபித்தா மகளிர் விடுதி ஆகியவை கட்டப்பட, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. இங்காம்போ ஹோகிப் (அஸ்ஸாம்)**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கர்பி ஆங்லாங்குக்காகத் துதிப்போம். புதிதாக பள்ளியில் மாணவர் சேர, பொதுத்தேர்வு எழுதிய மாணவர்கள் அதிக மதிப்பெண்கள் எடுக்க, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. செய்கோதாங் ஹோகிப் (சிக்கிம்)**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட டென்டம் தாருக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட சதுராம் குடும்பம், தேக்பகதூர் செட்ரி குடும்பம், இந்திரா லிம்பூ, சாந்தா லிம்பூ, பிக்ராம் சர்மா ஆகியோருக்காக, உபவாச ஜெபம், குடும்பக்கூட்டம் ஆகியவை நடைபெற்றதற்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.



## 2024 மார்ச் மாத வேத வினா – விடை போட்டியில் சரியான விடை எழுதியவர்களைப் பாராட்டுகிறோம்

**மதுரை**
ஜெயராணி மோகன்
ஜேம்ஸ் வேதநாயகம்
ராணி ஸ்டான்லி பால்
மேரி ராஜ்
சுசீலா ஆபிரகாம்
ஆசீர்வாதம்
டேவிட் ஜெயச்சந்திரன்
தெல்மா ஸ்டான்லி
குளோரி மல்லிகா
கலா செல்வகுமாரி
ஜெர்லி இம்மானுவேல்
ஜெயா ஜெபசெல்வம்
ஞானசிரோன்மணி
ரஜினி பியூலா ஷோபிகா
ஜேனட் சாத்ராக் பால்
ஜான்சி சாலமோன்
ஹேமலதா வில்சன்
மனோகராஜ்
மேரி ஜெபராஜ்
ஜான்சி காமராஜ்
ஷீலா சுரேஷ்
வினோதினி
அருள்மொழி ஜான்சன்
ஹில்டா எலிசபெத்
பங்கஜம் மார்த்தாண்டம்
ரத்னாபாய் ஜேசுதாசன்
ஜெஸி சந்திரதாஸ்
ஜெமி ஸ்டீபன்
ஃப்ளோரா சுந்தர்
மேரி ஜெயகுமார்
மேரி நிர்மலா ஆபிரகாம்

**கன்னியாகுமரி**
மோகன் சி கமலம்
டெய்ஸி டேவிட்
வசந்தா செல்வராஜ்
லலிதா ஜாஸ்பர்
சாந்தகுமாரி
லில்லி புஷ்பம்
பிரேமா ஜெரால்டு
இவாஞ்சலின் ராஜதுரை
ஹெப்சிபா நசல்
பியூலா ஜான்சன்
ஜெபஜோதிபாய்
செல்வி ரூபி
பமீலா எட்வின்
அருளப்பன்
அமுதா ரேச்சல்
கிறிஸ்டாபெல் ஜெயந்தி
தேவசகாயம்
கெஸியா ஜாய்ஸ்லெட்

**திருநெல்வேலி**
பாக்கியம்
விஜயவல்லி ஜான்
வயலட் கிறிஸ்டோபர்
ஜெபா நியூட்டன்
சந்திரபோஸ்
ரூத் ஜெயராணி அன்புராஜ்
ஞானசுந்தரி நாகராஜன்
கஸ்தூரி எலியாஸ்
சந்திரலீலா திரவியம்
ரூபி செல்வராணி
ஜெபகுட்டி மோசஸ்
ஜெயசிங்
குளோரி சுவாமிதாசன்
ஜோதிமாலா மனுவேல்
பிரின்ஸ் ஜான்ராஜாசிங்
செல்வராஜ்
பத்மா ராஜையா
அன்பு சுதந்திரம்
ஜாஸ்மின் சாம்சன்
பிரேமா ரூத்
சுந்தரி ஸ்டீபன்
நூர்ஜி
ரூத் கமலம்
சுந்தரி ஸ்டீபன்
வில்லியம் பிரெடெரிக்
ஹெலன் ஸ்வீட்
வசந்தா பாலசேகரன்
ரெஜினா சாலமோன்
சாந்தி ராஜன்
சொர்ண பாண்டியன் பீட்டர்
செல்வி பொன்னரசி
பிரின்சஸ் சுரேந்திரநாத்
லதா
ஜான்சி சந்தியா
இந்திரா ஜெயராஜ்
செல்வராஜ்
ஜேன் தர்மராஜ்

**தென்காசி**
செல்வி ஜேக்கப்

**தூத்துக்குடி**
அசோக்குமார் பிரின்ஸ்
தேவகிருபை
ஆதிசிரோன்மணி ஞானதீபம்
ரூபவல்யா
கிருபாசனம் ரெமீஜியஸ்
மனோகரம் ஜான்சன்
ரெத்னாம்பாள் ஈஸ்டர்ராஜ்
தேவமணி ஆபிரகாம்
அன்னத்தாய் ஆல்பர்ட்
சாலமோன்
அமிர்த புஷ்பம்
ஆனி இன்பநாயகம்
ஜலஜா மணிராஜ்
சேசம்மாள் தேவசகாயம்
ஹெலன் திலக்
ஞானமணி ஹெப்சிபா
ஜோதிமணி வில்சன்
ஆலீஸ் குணசீலி
பாக்கியராஜ்
ஷேபா கோயில்பிச்சை
ரெத்னாவதி முத்துராஜ்
முத்துமாணிக்கம்
ஆபிரகாம்
மேரி ஐசக்
ஜாய்ஸ் ஜான்சன்

**சென்னை**
கனகா வேணுகோபால்
டோரிஸ் பிலோமினா
சாந்தி டென்னிசன்
கிரேஸ் தங்கதுரை
செலின்ராணி டேவிட்
டேவிட் ஜெயகுமார்
யூனிஸ் ரிச்சர்ட்
ஹெப்சிபா தாமஸ்
பெட்டி பிரின்ஸ்
துரைராஜ்
அன்னாள் ஜான்
ஜோன் தேவநாயகம்
சைமன் கலைச்சந்திரன்

**திருச்சி**
ஜெபமணி டேவிட்
டேவிட்
சூசன்னா
ஜெபசீலி ஜெயகொடி
லில்லியன் ஜோசப்
தேவகிருபை
சிசிலியா ஜெயபிரகாஷ்
ஜெயவதி ராஜன்
சாந்தி ஜோயல்

**கோயம்புத்தூர்**
அன்பு கமலம்
கிதியோன்
வசந்த மல்லிகா
அருணோதயம் வில்லியம்
நீதிராஜன்
ஜான்சி

**தேனி**
நேசமணி சாமுவேல்
எலிசபெத் பால்ராஜ்
மாலா வில்சன்

**விருதுநகர்**
பிளாரான்ஸ் ராஜமோகன்

**புதுக்கோட்டை**
சாந்தி வில்லியம்

**தஞ்சாவூர்**
மல்லிகா ஞானபாய்
குணசீலி ஸ்டீபன்
பிரமீளா செல்வம்
சாந்தி ஞானசேகரன்
ராஜா சமாதானம்
ரோஸலின் செல்வராணி

**சிவகங்கை**
பாலின் மார்டின்
லலிதா பெவின்சன்

**ஈரோடு**
இமாகுலேட் விக்டர்பாபு
ஜெயகுமாரி
ரூத் நேசமணி

**பெங்களூரு**
டாரத்தி சாந்தகுமாரி
பால்ராஜ்
சூர்யா ரிச்சர்ட்சன்

**நீலகிரி**
ஈவ்லின் தேவப்ரியம்
பத்மாவதி அர்னால்டு
ஜாய்ஸ் ஸ்டீபன்ராஜ்
உஷா பெஞ்சமின்
சுலோச்சனா பாஸ்கர்

**சேலம்**
இவாஞ்சலின் ஜோன்ஸ்
ரோலண்ட் அருள்ராஜ்
பால் ராஜ விஜயன்

**திண்டுக்கல்**
மங்களவதி காபிரியேல்

**திருப்பூர்**
கனகசத்தியவதி
தேவி ராஜாசிங்

**இராமநாதபுரம்**
ஸ்டெல்லா வசந்தகுமாரி

**பாண்டிச்சேரி**
பியூலா ஜெசுராஜன்

**கள்ளக்குறிச்சி**
மெட்டில்டா ரோஸ்மேரி

**மும்பை**
லீலா ஏர்னஸ்ட்

**திருவண்ணாமலை**
பீட்டர் தாமஸ்

**செங்கல்பட்டு**
ஜரீன் லீனா

# வேத வினாக்கள்

**ஏப்ரல்- 2024**

**(சகரியா 1-7 அதிகாரங்கள் முடிய)**

**பொருத்துக**

1. சீயோன் – மாதம்
2. ஏழு கண்கள் – இரக்கம்
3. சேபாத் – ஈயக்கட்டி
4. மரக்கால் – பாபிலோன் குமாரத்தி
5. தயவு – தூக்கு நூல்

**கோடிட்ட இடங்களை நிரப்புக**

1. ..... ராஜா அரசாண்ட ..... வருஷம் ..... என்னும் ..... மாதம் நாலாந்தேதியிலே ..... கர்த்தருடைய வார்த்தை உண்டாயிற்று.
2. நான் அதற்கு சுற்றிலும் ..... இருந்து அதன் நடுவில் ..... இருப்பேன் என்று ..... சொல்லுகிறார்.
3. இதோ, ..... முழுவதும் ..... ..... இருக்கிறது.
4. ..... சுற்றிப்பார்க்கிறவைகளாகிய ..... ..... செருபாபேலின் கையிலிருக்கிற ..... சந்தோஷமாய்ப் பார்க்கிறது.
5. பறக்கிற ஒரு ..... காண்கிறேன். அதன் நீளம் .... அதன் அகலம் .....

**விடை எழுதுக**


1. சிறையிருப்பின் மனுஷர் யார்?
2. எவைகளை கேளாதபடிக்கு தங்கள் இருதயத்தை வைரமாக்கினார்கள்?
3. சகரியா யார்?
4. அழுக்கு வஸ்திரம் தரித்தவனாய் தூதனுக்கு முன்பாக நின்றவன் யார்?
5. கர்த்தர் திரும்பவும் எருசலேமை எப்படி தெரிந்து கொள்வார்?

- கேள்விகளை எழுதாமல், பதில்களை மட்டும் சுருக்கமாக எழுதவும். தபால் அட்டையில் எழுத வேண்டாம்.
- தபால் அட்டையில் எழுதினால் பெயர் பிரசுரம் செய்யப்படாது.
- தங்கள் சந்தா எண், தொலைபேசி (அ) அலைபேசியுடன் (Cell) முழு முகவரியையும் எழுதவும்.
- **பரிசுக்கு உரியவர்களை குலுக்கல் முறையில் தேர்வு செய்கிறோம்!**

**விடைகள் அனுப்ப வேண்டிய முகவரி *வேதவினா–விடை,* வளரும் விண்ணரசு,**
**58/1, முத்தாலம்மன் கோவில் தெரு, சேலையூர், சென்னை – 600 073.**

- **வேத ஆதாரத்துடன் விடைகள் வந்துசேர** கடைசி நாள் இம்மாதம் 20ஆம் தேதி.
- **தொகுப்பு:** Mrs. **மெர்ஸி கிறிஸ்டோபர்,** *சென்னை.*

**மார்ச் மாத வேதவினா–விடை போட்டியில் பரிசு பெற்றவர்களைப் பாராட்டி வாழ்த்துகிறோம்!**



| | | |
|---|---|---|
| முதல் பரிசு | : சந்திரலீலா திரவியம் | – திருநெல்வேலி |
| இரண்டாம் பரிசு | : வினோதினி சுவாமிநாதன் | – மதுரை |
| மூன்றாம் பரிசு | : லலிதா பெவின்சன் | – சிவகங்கை |

# ஆண்டவர் தொடும்போது...

## *பிசாசுகளின் மீது அதிகாரம்*

பொன்னுராஜ் G.

மனிதர்கள் தங்கள் கருத்துக்களை சக மனிதர்களோடு பகிர்ந்து கொள்வதற்காக உருவானதே மொழியாகும். கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்பட வேண்டாம் என்பது திருமறை கூறும் அறிவுரை.

-----

நொச்சியம்.

திருச்சி–நாமக்கல் தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ள ஒரு சிற்றூர். இங்கேயுள்ள காவிரி படுகையில் அரசு அனுமதி பெற்ற மணல்குவாரி உள்ளது. காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை மணல் அள்ள அனுமதி உண்டு.

இவர் ஒரு லாரி டிரைவர். மதுரையிலிருந்து லாரியை எடுத்துக் கொண்டு நொச்சியம் வரும்போது மாலை 6 மணிக்கு மேல் ஆகிவிட்டபடியால், அன்று மணல் அள்ள முடியவில்லை. ஆகவே, அன்று இரவு சாப்பாடு முடித்துவிட்டு, லாரியை வரிசையில் நிறுத்திவிட்டு, லாரியின் இரு கதவுகளையும் மூடிவிட்டு, 9 மணிக்கெல்லாம் தூங்க ஆரம்பித்தார்.

இரவு 11 மணி... இவருடைய காதுகளில் இவருடைய அம்மாவும், சில உறவுப்பெண்களும், தமிழில் கேட்கமுடியாத காது கூசுகிற அளவிற்கு கெட்ட வார்த்தைகளில் அவரை வசை பாட ஆரம்பித்தனர். திடுக்கிட்டு எழுந்தவருக்கு தான் காண்பது கனவா அல்லது நினைவா என்று நினைக்கும் அளவுக்கு அந்த சூழ்நிலை அமைந்திருந்தது. பக்கத்தில் யாருமில்லை. லாரியின் கதவுகளும் பூட்டப்பட்டிருக்கிறது. அதுவும் இந்த இரவு வேளையில் அம்மாவும் மற்ற உறவுப்பெண்களும் 200 கி.மீ தூரமுள்ள இந்த இடத்துக்கு வந்திருக்க வாய்ப்பில்லை. எனவே ஏதோ பிரமை என்று நினைத்தவாறு, மீண்டும் தூங்க ஆரம்பித்தார்.

தூங்கிய சிறிது நேரத்திலேயே மீண்டும் அதே வசவுகள், அதே அம்மா மற்றும் உறவுக்காரப் பெண்களின் குரல்கள். மீண்டும் திடுக்கிட்டு எழுந்து சுற்றும் முற்றும் பார்த்தார். எல்லாம் சரியாகத்தான் இருக்கின்றன. பின்பு நான் கேட்கும் சத்தம் எங்கிருந்து வந்தது. வேறு யாராவது லாரியின் கீழே இருந்து கத்திவிட்டு சென்றிருப்பார்களோ என்ற சந்தேகத்தில், கதவைத்திறந்து கொண்டு, லாரியை விட்டு இறங்கி சுற்றும் முற்றும் தேடினார். அங்கே யாருமில்லை. பக்கத்திலுள்ள லாரியிலுள்ளவர்களிடத்தில் விசாரித்தார். அவர்கள் நல்ல தூக்கத்திலிருந்தனர். ஆனாலும், யாருமே அதிலும் குறிப்பாக பெண்கள் யாருமே வரவில்லை என்றே கூறினார்.

இப்போது, லேசாக மனதுக்குள் பயம் வேர்விட ஆரம்பித்தது. ஆனாலும், நாங்களெல்லாம் சுனாமிலேயே சுவிம்மிங் போடறவங்க என்று நெஞ்சை நிமிர்த்துக் கொண்டு, லாரியில் ஏறி தூங்க ஆரம்பித்தார். தூக்கத்தில் கண்சொருகும் அந்த நேரத்தில் மீண்டும் அதே குரல்கள், முன்பைவிட அதிகமாக கேட்க ஆரம்பித்தது. மீண்டும் கண்ணை திறந்து பார்த்தார். லாரியில் தன்னைத் தவிர யாருமில்லை. ஆனால் சத்தங்கள் மட்டும் கேட்டுக் கொண்டிருந்தது. இனிமையான பாடல்களா அவை? இல்லையில்லை காதை இரணமாக்கும் அமில வார்த்தைகள். இப்போது, அந்த வார்த்தைகள் மிகத்துல்லியமாக கேட்க ஆரம்பித்தது. டே எங்களை விட்டு எங்க தப்பிக்க பாக்கிற. உன்ன என்ன செய்றோம் பாரு என்ற உக்கிரமான வார்த்தைகள் இப்போது பயத்தை அதிகப்படுத்தின. ஆனாலும் சுனாமில சுவிம்மிங் போடற தைரியத்தினால், அந்தச் சத்தங்களை கேட்டுக் கொண்டே அதிகாலை மூன்று மணிக்கு தன்னையறியாமல் தூங்கிவிட்டார்.

காலை 6 மணிக்கெல்லாம் மணல்குவாரி செயல்பட ஆரம்பித்துவிடும் என்பதால், 6 மணிக்கு விழிப்பு வந்துவிட்டது. இப்போது எந்த சத்தமும் கேட்கவில்லை. மனதுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. ஒருவழியாக மணலை லாரியில் அள்ளியாயிற்று. இன்னும் சில லாரிகள்தான் அதற்குப்பின் அனுமதி வாங்கியவுடனே சிட்டாக மதுரைக்கு பறந்துவிட வேண்டும் என்று மனதுக்குள் திட்டம் போட்டு வைத்திருந்தார். ஏனென்றால் இரவு கேட்ட அந்த அசிங்க... இல்லையில்லை அமிலத்தில் முழ்க வைத்து எடுத்த வார்த்தைகள். அதை நினைத்தாலே அவருக்கு உடல் நடுங்கியது. ஒருவழியாக அனுமதிச் சீட்டும் வாங்கியாயிற்று. அப்பாடா, இனிமேல் ஒரு பிரச்சனையுமில்லை. வண்டி எடுத்துகிட்டு வெரசா ஊர் போய் சேரவேண்டியதுதான் என்று நினைத்த அந்த நொடியில், மீண்டும் அதே சத்தம். அதே அமில வார்த்தைகள். வண்டியை நிறுத்திவிட்டு, சுற்றும் முற்றும் கவனித்தார். சூரிய வெளிச்சம் அந்த இடத்தை முழுமையாக ஆக்கிரமித்திருந்த காரணத்தினால் அந்த இடமே வெளிச்சமாயிருந்தது. ஆனால், யாரையும் காணவில்லை.

வண்டியை மீண்டும் இயக்க ஆரம்பித்தார். அப்போது பின்பக்க டயரில் இவருடைய மூத்தமகன் சிக்கிக் கொண்டு கதற ஆரம்பித்தான். அப்பா எம்மேல லாரிய ஏத்திடாதப்பா என்ற சத்தம் அவருடைய உள்ளத்தை உலுக்கிவிட்டது. எந்த தகப்பனாவது மகன் மேல போய் லாரியை வச்சு ஏத்துவானா? என்று மனம் பதைபதைத்தவாறு, வண்டியை நிறுத்திவிட்டு வேகமாக கீழே இறங்கி பார்த்தார். அங்கே... யாருமேயில்லை.

திடீரென்று டமார் என்று சத்தம் கேட்டது. லாரி டயர் வெடிச்சுடுச்சா? என்று பயந்தவாறு டயர்களை சென்று சோதித்து பார்த்தார். எல்லா டயர்களும் சரியாக இருந்தன. பக்கத்திலுள்ள டிரைவர்களிடம் கேட்டார். உங்களுக்கு ஏதாச்சும் சத்தம் கேட்டுச்சா என்றதற்கு அவர்கள் எந்த சத்தமுமே கேட்கவில்லை என்றபோதுதான், பயம் இவரை மெல்ல ஆட்கொள்ள ஆரம்பித்தது. நாம நினைச்சது போல இது சாதாரண காரியமில்ல. ஏதோ கெட்ட ஆவி நம்ம பின்னாலேயே வந்து நம்மள ஏதோ செய்யப்போகுது என்று பயந்தவாறு தன்னுடைய லாரியை அங்கேயே விட்டுவிட்டு, அப்போது அங்கு வந்த லாரியில் உள்ளவர்களிடம் தனக்கு ஏற்பட்ட நிலையை கூறி உதவி கேட்டார். அப்போது, அந்த லாரியிலிருந்த ஒருவர், யோவ் நானே சாமியாடி எங்கிட்ட பிசாசு பத்தி பேசுற. போய்யா அங்கிட்டு, என்றவாறு வண்டியில் வைத்திருந்த திருநீறை எடுத்து தன்னுடைய நெற்றியில் அப்பிக் கொண்டு, அவரை ஏற்றாமலே சென்று விட்டார்.

இனிமேல் தன்னுடைய உண்மையான நிலையை கூறி உதவிகேட்டால் கிடைக்காது. எனவே அடுத்த வந்த லாரியில் உள்ளவர்களிடம், நான் டீ குடிக்க போகிறேன் என்ன ரோட்டில இறக்கி விட்டுடுங்க என்றார். அதற்கென்ன ஏறிகொள்ளுங்கள் என்றனர். பொய்யின் வலிமையென்பது யானைக்கால் நோய் போல, உண்மையின் வலிமையென்பது உண்மையான யானை போல, இதனால்தான் உண்மை மெதுவாகவே வருகிறதுபோல என மனதில் நினைத்துக் கொண்டார். எப்படியோ ரோட்டிற்கு சென்று ஒரு கோயிலுக்கு போய்ட்டா இந்த பிரச்சனை முடிஞ்சு போகும் என்பது அவரது நினைப்பு. எல்லா பிரச்சனைகளுக்கும் தீர்வு ஒன்று இருக்கிறது. ஆனால், அதை எப்படி அடையப்போகிறோம் என்பதில்தான் நமது வாழ்க்கையின் தரம் இருக்கிறது. காவிரி மணற்படுகையிலிருந்து விலகி மெயின் ரோட்டுக்கு லாரி வந்தது. ஏதாவது ஒரு கோயில் வருகிறதா என்று பார்த்துக் கொண்டே வந்தார். அப்போது... அடைக்கலாபுரம் என்ற பெயர்ப்பலகையை தாங்கிய அந்த ஊரின் துவக்கத்திலே அந்தப்பெயரிலேயே அந்தக் கோயில் அமைந்திருந்தது.

அண்ணே இங்க நான் இறங்கிக்கிறேன் என்றவாறு லாரியை விட்டு இறங்கி அந்தக் கோயிலுக்கு சென்றார். கோயில் பூட்டப்பட்டிருந்தது. ஆகவே, வெளியில் இருந்தவாறு மனமுருக வேண்டினார். அப்போதுதான் அந்த சத்தம் காதை கிழித்தது. ஏண்டா இங்க வந்தாப்புல நாங்க உன்ன விட்ருவோமா? பழையபடி அதே அமில வார்த்தைகள். இடையிடையே உன்ன என்ன செய்யப் போறோம் பாரு என்ற எச்சரிக்கை வேறு. இதிலிருந்து தப்பிக்க என்னதான் வழி? குழம்பியவருக்கு திடீரென அந்த யோசனை உதித்தது.

*வளரும்...*

# நடப்புச் செய்திகள்

**2024-ஆம்** ஆண்டுக்கான உலகின் மிக மகிழ்ச்சியான நாடுகளின் பட்டியல் வெளியாகியுள்ளது. வழக்கம்போல் நார்டிக் தேசங்கள் இதில் வெகுவாக இடம்பெற்றுள்ளன. டென்மார்க், நார்வே, ஸ்வீடன், பின்லாந்து மற்றும் ஐஸ்லாந்து ஆகிய நாடுகளுடன் ஃபேரோ தீவுகள், கிரீன்லாந்து ஆகிய தீவுகளை உள்ளடக்கிய பகுதி நார்டிக் பிராந்தியமாக அறியப்படுகிறது. இந்த நார்டிக் பிராந்திய நாடுகள் டாப் லிஸ்டில் இடம்பெற்றுள்ளது. இஸ்ரேல் 5–வது இடத்தில் இருக்க, இந்தியா கடந்த ஆண்டைப் போலவே 126–வது இடத்தில் உள்ளது. ஐ.நா.வின் ஆதரவோடு ஆண்டுதோறும் தயாரிக்கப்படும் இந்த உலகின் மகிழ்ச்சியான நாடுகள் பட்டியலில் ஃபின்லாந்து முதலிடம் பெற்றுள்ளது. டென்மார்க், ஐஸ்லாந்து 2 மற்றும் 3–ஆம் இடங்களைப் பிடிக்க, ஸ்வீடன் 4–வது இடத்தில் உள்ளது. இஸ்ரேல் 5–வது இடத்தில் இருக்கிறது. 143 நாடுகள் கொண்ட இந்தப் பட்டியலில் கடைசி இடத்தை (143–வது இடம்) பிடித்துள்ளது ஆப்கானிஸ்தான். அங்கு கடந்த 2020–ஆம் ஆண்டு தலிபான் ஆட்சி அமைந்த பின்னர் கடுமையான மனிதாபிமான நெருக்கடி ஏற்பட்டுள்ளது. அதேவேளையில் இந்த அறிக்கையில் முதன்முறையாக அமெரிக்காவும், ஜெர்மனியும் டாப் 20 பட்டியலில் இடம்பெறாதது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. உலகின் மகிழ்ச்சியான நாடுகளின் பட்டியலில் அமெரிக்கா 23–ஆம் இடத்திலும், ஜெர்மனி 24வது இடத்திலும் இருக்கின்றன. மாறாக கோஸ்டாரிகா, குவைத் போன்ற நாடுகள் டாப் 20 பட்டியலுக்கு முன்னேறியுள்ளன. குவைத் 12–வது இடத்திலும், கோஸ்டாரிக்கா 13–வது இடத்திலும் உள்ளன. மகிழ்ச்சி அளவுகோலில் 2006 – 10 காலக்கட்டத்துக்குப் பின்னர் ஆப்கானிஸ்தான், லெபனான், ஜோர்டான் போன்ற நாடுகள் மிகக் கடுமையான வீழ்ச்சியை சந்தித்துள்ளன. கிழக்கு ஐரோப்பிய நாடுகளான செர்பியா, பல்கேரியா, லாட்வியா போன்ற நாடுகள் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் கண்டுள்ளன.

எப்படிக் கணக்கிடப்படுகிறது? – மகிழ்ச்சியான நாடுகள் என்று வரையறுக்க சில காரணிகள் கணக்கில் கொள்ளப்படுகின்றன. மக்கள் தங்கள் வாழ்க்கை மீது கொண்டுள்ள திருப்தி, ஜிடிபி வருவாய், சமூக ஒத்துழைப்பு, வாழ்நாள், சுதந்திரம், ஊழலின்மை, தாராள மனப்பான்மை ஆகியனவற்றை கருத்தில் கொண்டு இந்தப் பட்டியலில் தரவரிசை வழங்கப்படுகிறது. டாப் 10 இடங்களைப் பிடித்த நாடுகள்: 1. ஃபின்லாந்து, 2. டென்மார்க், 3. ஐஸ்லாந்து, 4. ஸ்வீடன், 5. இஸ்ரேல், 6. நெதர்லாந்து, 7. நார்வே, 8. லக்ஸம்பெர்க், 9. ஸ்விட்சர்லாந்து, 10. ஆஸ்திரேலியா.

**மாஸ்கோ**: ரஷ்யாவில் 6 ஆண்டுகளுக்கு ஒருமுறை அதிபர் தேர்தல் நடத்தப்படுகிறது. இந்நிலையில், ரஷ்யாவின் புதிய அதிபரை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் கடந்த வெள்ளிக்கிழமை தொடங்கியது. இத்தேர்தலில், தற்போதைய அதிபர் புதின் சுயேட்சையாக போட்டியிடும் சூழலில் ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சி, தேசிய சுதந்திர ஜனநாயக கட்சி, புதிய மக்கள் கட்சி ஆகியவை களம் கண்டன. முதன்முறையாக ரஷ்ய வரலாற்றில் மூன்று நாட்கள் வாக்குப்பதிவு நடந்தது. இந்நிலையில் அதிபர் தேர்தலில் மாபெரும் வெற்றி பெற்று ரஷ்ய வரலாற்றில் ஸ்டாலினுக்குப் பிறகு தொடர்ச்சியாக 3வது முறையாக அதிபர் தேர்தலில் வெற்றி என்ற சாதனையை புதின் படைத்துள்ளார். 200 ஆண்டுகளுக்குப் பின்னர் மீண்டும் ஒரு சாதனையை புதின் செய்துள்ளார். தேர்தலில் மெகா வெற்றியைப் பெற்றிருக்கும் புதின் ஆற்றிய முதல் உரையில், "அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படைகளும் – ரஷ்யாவும் நேருக்கு நேர் மோதிக் கொள்வது என்பது இந்த உலகம் மூன்றாம் உலகப் போரை எதிர்கொள்வதற்கு வெகு அருகில் நிற்கிறது என்று அர்த்தம். அத்தகைய சூழலை எவருமே விரும்பமாட்டார்கள். ஆனால், இந்த நவீன உலகத்தில் எதுவும் சாத்தியமே. ஆனால் உக்ரைனில் நேட்டோ படைகள் உள்ளன. அவற்றில் ஏற்கெனவே ஆங்கிலம் பேசும் வீரர்களும், பிரெஞ்சு பேசும் வீரர்களும் உள்ளனர். அவர்கள் அங்கே கொத்து கொத்தாக மடிந்து கொண்டிருக்கின்றனர். சம்பந்தப்பட்ட நாடுகள் தங்கள் வீரர்களை திரும்பப் பெற்றுக் கொள்வது நலம். சிறையில் இருந்த எதிர்க்கட்சித் தலைவர் அலெக்ஸ் நவல்னியை நான் விடுதலை செய்யவே விரும்பினேன். ஆனால் அவர் துரதிர்ஷ்டவசமாக உயிரிழந்தார். மேற்கத்திய நாடுகளின் சில சிறைகளில் இருக்கும் ரஷ்யக் கைதிகளுக்கு மாற்றாக நவல்னியை விடுவிக்க ஒப்புக் கொண்டிருந்தேன். அவரது மறைவு எதிர்பாராதது. ஆனால் அதை சிலர் விமர்சிக்கின்றனர். அமெரிக்கச் சிறைகளில் இதுபோன்ற இறப்புகள் நேர்ந்ததே இல்லை. உண்மையைச் சொல்ல வேண்டுமானால் நேர்ந்திருக்கின்றன. இவ்வாறு புதின் பேசினார். ரஷ்யா தேர்தலில் பதிவான வாக்குகளில் 70 சதவீதம் வாக்குகள் எண்ணப்பட்டுவிட்ட நிலையில் அவற்றில் 87.17 சதவீத வாக்குகளை புதின் பெற்றுள்ளார்.

நன்றி: தி இந்து தமிழ் திசை (20/03/2024, 18/03/2024)

◀◀◀◀◀

## ஆன்லைனில் காணிக்கை அனுப்புபவர்கள் கவனத்திற்கு...

நீங்கள் இந்திய திருச்சபை வளர்ச்சி மிஷனின் ஊழியத்திற்கென்று காணிக்கை அனுப்பும் போது,
எந்தத் தேவைக்கென்று பணம் அனுப்ப விரும்புகிறீர்களோ, அந்தத் தேவைக்குரிய வங்கிக் கணக்கில்
உங்கள் பணத்தை செலுத்தி, 94421 50482 என்ற எண்ணுக்கு எஸ்.எம்.எஸ்
அனுப்பும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். நன்றி.
இந்த **QR** கோடை பயன்படுத்தியும் உங்களுடைய காணிக்கையைச் செலுத்தலாம்.

## பொதுவான காணிக்கைக்காக

**Account Name : INDIA CHURCH GROWTH MISSION**
**Account Number: 10143136773**
**Bank : State Bank of India**
**Branch Name : Selaiyur, Chennai-73**
**IFSC Code : SBIN0007948**

## ஆலயக் கட்டிட நிதிக்காக

**Account Name : INDIA CHURCH GROWTH MISSION**
**Account Number: 11194454531**
**Bank : State Bank of India**
**Branch Name : Vinayaganagar, Madurai.**
**IFSC Code : SBIN0001479**

## மருத்துவ நிதிக்காக

**Account Name : ICGM MEDICAL EMERGENCY ENDOWMENT FUND**
**Account Number: 31961036921**
**Bank : State Bank of India**
**Branch Name : SELAIYUR, Chennai-73.**
**IFSC Code : SBIN0007948**

*****

**Registered with RNI Under No:TNTAM/2000/01585**
Postal Registration No: TN/MA/42/2024-2026 WPP No: TN/WPP-20/SR/2024-2026
Posted at BPC Madurai - 625 001.
Date of publishing: 1st APRIL 2024 Date of posting - 3rd APRIL 2024.
Printed by Mr.S.Gunasekaran and Published by Mr.D. Thirugnanam on behalf of Irai Arasu Trust and printed at Sharon Print System, No:51/71, Ahimsapuram First Street, Near Saraswathi Theatre, Sellur, Madurai-625002 and Published at Nagamalai Pudur, Palkalai Nagar, Madurai-625021, Editor Mr.G. Ponnuraj.

## பொதுச்சேவகரிடமிருந்து தொடர்ச்சி...

மார்ச் 19ஆம் தேதி அலுவலக ஊழியர்களுக்கென மதியம் 1 மணி வரை சிறப்புக்கூட்டம் நடைபெற்றது.

மார்ச் 20ஆம் தேதி மதுரையில் நடைபெற்ற நமது அருட்பணியாளர்களின் கூட்டத்தில் முனைவர் சைமன் லீ அவர்கள் கலந்து கொண்டு தேவ வார்த்தையை பகிர்ந்து கொண்டார்.

நமது பலவருட ஜெபம் கேட்கப்பட்டு, திருச்சி மாவட்டம் உப்பிலியபுரம் கிராமத்தில் ஆலயம் கட்டப்பட்டு, மார்ச் மாதம் 21ஆம் தேதியன்று தேவநாம மகிமைக்கென்று ஆலயம் அர்ப்பணிக்கப்பட்டது.

22ஆம் தேதி நமது கோண்டி அருட்பணியாளர் திரு. சுக்ராம் சலாம் தனது M.Div பட்டத்தை ஜுபிலி மெமோரியல் இறையியல் கல்லூரியில் (JMBC) பெற்றார். C.Th முடித்த மற்ற கோண்டி மாணவர்களும் அன்றே பட்டங்களைப் பெற்றனர். இவர்கள் இன்னும் உயர் இறையியல் கல்வியைத் தொடர ஜெபித்துக் கொள்ளுங்கள்.

நமது இயக்கத்தை ஜெபத்தாலும், பொருளாலும் தாங்குகிற உங்கள் அனைவரையும் தேவன்தாமே ஆசீர்வதிப்பாராக.

தேவ கிருபை உங்களோடிருப்பதாக.

கிறிஸ்துவின் சீடராக்கும் பணியில்,
**அருள்திரு.அ. லெஸ்லி நாகராஜன்,**
**பொதுச்சேவகர்.**

**If undelivered, please return to:**

**Valarum Vinnarasu, No.58/1. Muthalamman Koil Street, Selaiyur, Chennai - 600 073. Tamilnadu. Cell : 9442150482**

To: